உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை





மலர் 19 || கீலக ஹு ஐப்பசித் திங்கள் 1-ம் உ [17-10-68] || இதழ்-10


# சிதம்பர மும்மணிக்கோவை

## உரைநடை


சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்,
பாலகவி
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.


*(மலர் 19 இதழ் 9-ன் தொடர்ச்சி)*

தக்கனார் வேள்வி தகர்த்துச் சமர்முடித்த
நக்கனார் தில்லை நடராசர் – ஒக்கற்
படப்பாய லான்காணப் பைந்தொடிதா னென்றோ
இடப்பாதந் தூக்கியவா வின்று. (12)

தக்கன் செய்த வேள்வியைச் சிதைத்துப் போர்முடித்த திகம்பரராகிய தில்லைநடராசர் சுற்றத்தானாகிய பாம்புப்பாயலை

உடைய திருமால் காணும்படி இப்பொழுது இடது திருவடியைத் தூக்கி இருப்பது அது பசிய வளையல்களை அணிந்த உமாதேவியின் திருவடிகள் என்பதனாலோ?

**இனமொக்குந் தொண்டரோ டென்னையு மாட்கொண்ட ஈசர்தில்லைக்**
**கனமொக்குங் கண்டத்தெங் கண்ணுத லார்சடைக் காடுகஞ்ச**
**வனமொக்கு மற்றவ் வனத்தே குடிகொண்டு வாழும்வெள்ளை**
**அனமொக்குங் கங்கை யருகேவெண் சங்கொக்கு மம்புலியே. (13)**

தகுதியால் தம்முள் ஒத்த மெய்த்தொண்டர்களோடு என்னையும் ஆட்கொண்ட இறைவரும், தில்லைப் பதியில் மேகத்தையொத்த கழுத்தையுடைய எமது நெற்றிக்கண்ணரு மாகிய கூத்தப் பெருமானது சடைக்காடு தாமரைக்காட்டை ஒக்கும். அச்சடையில் உள்ள கங்கை அந்த வனத்திற் குடிகொண்டு வாழுகின்ற வெள்ளை அன்னத்தை ஒக்கும். அதில் உள்ள சந்திரன் அருகில் உள்ள வெண் சங்கத்தை ஒக்கும்.

புலிக்கான் முனிவற்குப் பொற்கழல் காட்டிக்
கலிக்கா னிவந்த கட்டில் வாங்கி
மாயோன் மணிப்படப் பாயலு மெடுத்து
வறும்பாழ் வீட்டில் வைத்துக் கொண்டிருந்
துறங்காது விழித்த வொருதனிக் கள்வ
காற்றூர்க் குடம்பைக் காமப்புட் படுக்கத்
தீப்பொறி வைத்த திருநுதற் கண்ண
ஆதி நான்மறை வேதியற் பயந்த
தாதை யாகிய மாதவ ரொருவரும்
இருங்கா னத்தி யிறைவர்முன் னுண்ண
அருஞ்சா பத்தா லமுதமூ ணுக்கும்
நற்றவ வேடக் கொற்றவ ரொருவரும்
ஒருபிழை செய்யா தருள்வழி நிற்பவவ்
விருவர்கண் பறித்த தரும மூர்த்தி
முட்டையிற் கருவில் வித்தினில் வெயர்ப்பில்
நிற்பன ரெளிவ தத்துவ தவழ்வ
நடப்பன கிடப்பன பறப்பன வாகக்
கண்ணகன் ஞாலத் தெண்ணில்பல் கோடிப்
பிள்ளைகள் பெற்ற பெருமனைக் கிழத்திக்கு
நெல்லிரு நாழி நிறையக் கொடுத்தாங்
கெண்ணான் கறமு மியற்றுதி நீயென
வள்ளன்மை செலுத்து மொண்ணிதிச் செல்வ

**அளியன் மாற்றமொன் றிகழாது கேண்மதி**
**எழுவகைச் சனனத் தெம்ம ேனோரும்**
**உழிதரு பிறப்பிற் குட்குவர் தம்ம**
**முழுவது மொரீஇ முத்திபெற் றுய்வான்**
**நின்னடிக் கமலம் போற்றுப விங்கிலத்**
**தொருபது வகைத்தாம் யோனிதோ றுழன்றும்**
**வெருவரும் பிறப்பின் வேட்கைய னாகிநின்**
**சந்நிதி புக்குமத் தாமரைக் கண்ணன்**
**துஞ்சினன் றுயிலொரீஇ யெழாஅன்**
**அஞ்சினன் போலுநின் னுடல்காண் பதற்கே.** (14)

வியாக்கிரபாத முனிவருக்குப் பொன் போன்ற திருவடிகளைக் காட்டித் துன்பத்தினிடத்து மேலோங்கிய பாசத்தால் ஆகிய உடம்பை நீக்கித் திருமாலினது படுக்கையாகிய ஆதி சேடனை எடுத்து வெறும் பாழிடமாகிய அறிவு வெளியில் வைத்துக் கொண்டிருந்து தூங்காது விழித்திருக்கும் ஒப்பற்ற ஒரு கள்வனே! தென்றலாகிய தேரைக் கூடாகக் கொண்ட மன்மதன் என்னும் பறவை எரிந்து போகும்படி தீப் பொறியை வைத்திருக்கும் அழகிய நெற்றிக் கண்ணையுடையவனே! முதலில் தோன்றிய நான்கு வேதங்களையும் ஓதுகின்ற பிரமதேவனைப் பெற்ற தந்தையாகிய பெருந்தவத்தையுடைய திருமாலும், பெரிய திருக்காளத்தி மலையிலுள்ள குடுமித் தேவர் திருமுன்பு உண்ணுதற்கு வில்லினால் ஊனை அறிய அமுதமாகச்செய்த நல்ல தவத்தை உடைய வேட்டுவ அரசரும், ஒரு பிழையையும் செய்யாது திருவருள் வழியே ஒழுகி நிற்க அந்த இருவரது கண்களையும் பறித்த தரும மூர்த்தியே, முட்டையிலும், கருவிலும், வித்திலும், வியர்வையிலும், நிற்பனவும். நெளிவனவும், தத்துவனவும், தவழ்வனவும், நடப்பனவும், கிடப்பனவும், பறப்பனவுமாக இடமகன்ற இந்த நிலவுலகத்தில் எண்ணில்லாத பலகோடி பிள்ளைகளைப் பெற்ற பெரிய இல்லக் கிழத்தியாகிய உமாதேவிக்கு இருநாழி நெல்லை நிறையக் கொடுத்து அது கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் நீ செய்வாயாக! என்று கொடையில் செலுத்திய ஒள்ளிய பொருட் செல்வனே! இரங்கத்தக்கவனாகிய அடியேனது விண்ணப்பம் ஒன்றை இகழ்தல் செய்யாது கேட்பாயாக! எழுவகைப் பிறப்பையுடைய எம்போன்

ரும், சுழற்சியையுடைய பிறப்பிற்கு அஞ்சிப் பற்றுக்கள் முழுவதையும் விட்டு முத்தியை அடைந்து உய்யும் பொருட்டு உனது திருவடிக் கமலங்களைப் போற்றுவார்கள். இந்த நில வுலகத்தில் பத்து வகைப்பட்ட யோனிகள் தோறும் பிறந்து உழன்றும், மேலும் அஞ்சத்தகுந்த பிறப்பில் விருப்புடைய வனாகி உனது சந்நிதிக்கு வந்தும், அந்தத் தாமரைக் கண்ண னாகிய திருமால் தூங்கிக் கொண்டிருக்கின்றான். துயில் நீங்கி எழமாட்டான். உனது திருக்கூத்தைக் காண்பதற்கு அவன் அஞ்சினான் போலும்.

**ஆட்டுகின்றோ ரின்றிமன்று ளாடுமா னந்தத்தேன்**
**காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று - வேட்டதனை**
**உற்றுநெடு நாளாக உண்ணுமோர் மால்யானை**
**பெற்றதொரு கூந்தற் பிடி. (15)**

திருச்சிற்றம்பலத்தில் நட்டுவனாரில்லாமல் ஆடுகின்ற ஆனந்தத் தேனை காட்டும் முக்கட் கரும்பு ஒன்று உள்ளது. அதனை விரும்பி நீண்ட நாட்களாகச் சேர்ந்து ஒரு பெரிய யானையாகிய விநாயகக் கடவுளைப் பெற்ற ஒப்பற்ற கூந்தலை யுடைய பெண்யானையாகிய சிவகாமவல்லியார் நுகர்ந்து கொண்டிருக்கிறார்.

**பிடிப்ப துமக்கெனை வேண்டின்வெங் கூற்றெனும் பேர்முடிய**
**முடிப்பது மத்த முடியார்க்கு வேண்டுமுக் கட்பரனார்**
**அடிப்பது மத்தொன் றெடுத்துத்தென் பான்முக மாகநின்று**
**நடிப்பது மத்தன்மை யாநம னாரிது நாடுமினே. (16)**

இயமனாரே! நீர் என்னைப் பிடிக்க விரும்பினீரானால் ஊமத்த மலரையணிந்த சிவபெருமானுக்கு கூற்றம் என்னும் பேர் முடிவாகப் பொருந்தும்படி உம்மை முடித்துவிடுவது நிகழ்ந்துவிடும். அந்த முக்கட் பரம்பொருள் திருவடிக் கம லங்களுள் ஒன்றை எடுத்துத் தென்பால் முகமாக உம்மை நோக்கி நின்று கூத்தாடுவதும், அந்தக் குறிப்பிலேயே ஆகும். இதனை நாடி அறிவீராக!

—

(தொடரும்)

# திருஎருக்கத்தம் புலியூர்

மு. அ.

**இடம் :-** தென்னார்க்காடு மாவட்டம் விருத்தாசலத்திலிருந்து ஆண்டிமடம் ஜெயங்கொண்ட சோழபுரம் செல்லுகின்ற பேருந்து வழியில் இரண்டு கல் தூரத்தில் உள்ளது. கோயில், சாலையிலிருந்து தென்புறம் ஒரு பர்லாங் தூரத்தில் உள்ளது.

**பெயர் :-** எருக்கங் காடு ஆனமையாலே எருக்கு அத்தம்; புலி பூசித்தமையால் புலியூர்; ஆகையால் எருக்கத்தம் புலியூர்; இப்போது இராசேந்திரப் பட்டணம் என்று வழங்குகிறது. நரேந்திரன் என்ற பாண்டியன், பிள்ளை யில்லாது வருந்தி இங்கு வந்து வழிபட்டு இராசேந்திரன் என்ற பிள்ளையைப் பெற்றமையால் இவ்வூர் இராசேந்திரப் பட்டணம் என்று பெயர் பெற்றது.

—**வாடுமிடை**

**நீலமலர்க் கண்ணியுடன் நீளெருக்கத் தம்புலியூர்ப்**
**பாலுகந்த நீலகண்டப் பண்ணவா-**

இவ்வாறு நாம அட்டவணையில் சுவாமி அம்பிகையின் பெயர் நீல கண்டேசுவரர், நீலமலர்க் கண்ணம்மை என்றிருந்த போதிலுங் கூட, வழங்குகின்ற பெயர் குமார சுவாமி, வீறுார்முலை என்பனவாம். சம்பந்தர் தேவாரத்தில்

**வீறுார் முலையாளைப் பாகம் மிகவைத்துச்**
**சீறு வருகாலன் சினத்தை யழிவித்தான்**
**ஏறு ளெருக்கத்தம் புலியூரி றையானை**
**வேறு நினைவாரை விரும்பா வினைதானே**

(963-ஆம் பாடல்) எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. வீறு ஆர்- ஒப்பில்லாத அழகு பொருந்திய. தல விருட்சம் வெள்ளெருக்கு. இது நடு நாட்டுத் தலங்களுள் நான்காவது.

**கோயில் :-** கிழக்கு பார்த்த சந்நிதி. எதிரில் கந்த தீர்த்தம் என்ற பெயருடைய தாமரைக் குளம், கரை இடிந்த நிலையிலுள்ளது. வட, மேல் கரைகளில் சிறு கற்படித் துறைகள் மூன்று நிலையுடைய சிறு கோபுரம். கோபுர வாயிலில் விநாயகர்; வெளிச் சுவர் சிலமாயிருக்கிறது. மதில் சுவர் நல்ல நிலை; பெரிய கொடிக் கம்பம். சுவாமிக்கு வலப் புறத்தில் அம்பாள் கோயில். இதன் வெளிக் கோட்டங் களில் ஐந்து சத்திகள் உள்ளனர். உள்சுற்று இரண்டு கோயி லையும் சூழ்ந்தது. திரு மாளிகைச் சுற்றில் நிருதியில் மகா கணபதி. காசி விசுவநாதர், விசாலாட்சி. அடுத்து, முருகன் தேவியரோடு, இலக்குமி, நாராயணப் பெருமாள், சரசுவதி. சுவாமி கருவறைக் கோட்டங்களில் நிருத்த விநாயகர், உய ரத்தில் சட்டநாதர், தக்கணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரமன், துர்க்கை பின் சண்டேசர். முன் மண்டபங்கள் கல்லால் ஆயின; கருவறைகள் செங்கல். புதிய நவக்கிரகங்கள்.

**மூர்த்தி :-** சுவாமி சுயம்பு. சிறிய திருவுரு. வாயில் உள்ள துவாரபாலகர் பெரிய உருவம். இரண்டு கைகள் உடையவர். சந்நிதிக் கெதிரில் திருநீலகண்டர் யாழேந்திய படி; மதங்கசூளாமணி யம்மையார் தாளம் ஏந்தியபடி; உற்சவ மூர்த்திகள் அனைவரும் உள்ளனர். யாவரும் வியக் கத்தக்க முறையில் மிகவும் பிரகாசமான வடிவங்கள். பழமை யான கூத்தாடும் சம்பந்தரும், சுந்தரரும் உள்ளனர். நட ராசத் திருமேனி மிகவும் சிறப்பானது. இங்கிருந்த பெரிய நடராசரை நெடுங்காலத்துக்கு முன்னமே விற்று விட் டார்கள் எனவும். அது அமெரிக்க மியூஸியம் போய் விட் டது என்றும் குருக்கள் சொன்னார். பெரிய சிவகாம சுந்தரி வடிவம் மட்டும் கவனிப்பின்றித் தனியே உள்ளது. இவர் அன்றி, கொஞ்ச நாளைக்கு முன் கோயிலில் ஓர் இடம் வெட்டிய போது கீழே புதையுண்டிருந்து கிடைத்த திரு மேனி என்று ஒரு நடராச உருவும், அம்பிகையும் வைக்கப் பெற்றுள்ளன. இவர்கள் மிகவும் சிறப்பான அழகும் பொலி வும் மிக்க திருமேனியுடையர்; திருமுகப் பொலிவு மிகவும் சிறப்பானது. இவ்வுருவங்களன்றி வழக்கம் போல் பிற்கா லத்து நடராசாவும் அம்பிகையும் உள்ளனர்.

**பாடல் :-** சம்பந்தர் தேவாரம் குறிஞ்சிப் பண்ணில் ஒரு பதிகம். சிவப்பிரகாசர் என்பவர் 18-ஆம் நூற்றுண்டில் 476 பாடல் கொண்ட புராணம் பாடியிருக்கிறார். இது பன்னிரு சருக்கங்கள் உடையது.

அருணகிரி நாதர் 'பூத்தார் சூடும்' என்ற திருப்புகழில் யாழ்ப்பாணயன் பட்டணம் என்று இவ்வூரைக் குறிப்பிடுகிறார்.

**வரலாறு :-** திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிறந்த தலம். அவர் விருப்பப்படி சம்பந்தர் இங்கு வந்து வழிபட்டார். தேவ கணங்கள் வழிபட்டமையால் கணேசுவரம் என்ற பெயருமுண்டு. திருவிளையாடலில் கூறியபடி வேதங்களைக் கடலில் எறிந்த குமாரக் கடவுள் ஊமையாகி இங்கு வந்து பூசித்து ஊமை நீங்கப் பெற்றார் என்பது தலவரலாறு. இது பற்றியே சுவாமி பெயர் குமாரசுவாமி. தவஞ் செய்து கொண்டிருந்த பிராமணனைக் கொல்ல வந்த புலியைக் கொன்ற வேடன் அப்புண்ணிய விசேடத்தால் புலிக்கால் முனிவராகப் பிறந்து இங்குப் பூசித்தமையால் இவ்வூர் புலியூராயிற்று. பிறர் வெட்டாத மரமாகிய வெள்ளெருக்கம் மரமாகத் தேவர்கள் நின்று பூசிக்குங் காரணத்தால் இது எருக்கத்தம் புலியூர் ஆயிற்று.

**கல்வெட்டு :-** சுவாமி முன் மண்டபத்தின் உத்தர வரிகள், தூண் முதலியவற்றில் கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன.

**நிர்வாகம் :-** 100 ஏக்கர் நிலமுண்டு. நிர்வாக அதிகாரி உள்ளார். நாலு கால பூசை. முன்னர் திருவிழாக்கள் நடந்தன. வாகனங்கள் யாவும் உள்ளன. இப்பொழுது விழா இல்லை. கோயில் இப்பொழுது திருப்பணி செய்ய வேண்டிய நிலை. செய்யாவிட்டால் கிலமாகக்கூடும்.

---

*மேலே கண்ட கட்டுரை 'சித்தாந்தம்' ஆசிரியர் அனுமதி பெற்று பிரசுரிக்கப்படுகிறது.*

# திருமந்திரம் TIRUMANTIRAM

## ஆறுந்தந்திரம் Tantra the Sixth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

(மலர் 19. இதழ் 9-ன் தொடர்ச்சி)

### அருள்பெற்றவரே தவத்தின் பெருமை அறிகுவர்
### Only the blessed know the greatness of tapas

53. எம்மாருயிரும் இருநிலத் தோற்றமுஞ்
செம்மா தவத்தின் செயலின் பெருமையும்
அம்மான் திருவருட் பெற்றவர்க் கல்லா
திம்மா தவத்தின் இயல்பறி யாரே.

The mystery of life, the Origin of earth,
The might of pure deeds of tapas
Who may know them all
But they that receiveth the Lord's Grace?
The rest knoweth naught of the tapas supreme,

ஆன்மா பற்றியும், உலகு பற்றியும், தூய தவத்தின் ஆற்றல் பற்றியும் இறைவன் திருவருள் பெற்றவரே அறிகுவர். ஏனையோர் தவத்தின் பேராற்றலை அறியார்.

### தவஞ்செய்வார் பிறப்பினை ஒழிப்பார்.
### Tapasi endeth birth

54. பிறப்பறியார் பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்,
மறப்பிலராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற்றாரே.

They Knoweth not the birth to be
That practiseth diverse charity;
On them shalt be showered all blessings of wealth;
But they that performeth tapas in mortal
Shalt verily see the end of all births to be.

பல வகையான தானங்களைச் செய்வோர் செல்வக்குவியலைப் பெற்று சிறந்து வாழ்வர்; வரும் பிறப்பினை அறுக்க மாட்டாதார். ஆனால் உறுதியான கடுந்தவஞ் செய்வோர் பிறப்பினை ஒழிக்கும் சிறப்பினைப் பெறுவர்.

**கருத்து: வரி-1.** *பிறப்பரியார் என்ற பாடபேதம் சிறக்கும்-பிறப்பினை நீக்கார்-தானம், தவம் இரண்டும் வேண்டற்பாற்று என்பதை வற்புறுத்தினர். தானம் இம்மையும் தவம் மறுமையையும் கொடுக்க வல்லன. தவமே இறுதிக்கு சிறந்தது.*

## தவஞ்செய்வோர் சிவமொன்றே கருதுவர்
## Topasis think of Siva alone

55. **இருந்து வருந்தி எழிற்றவஞ் செய்யும்**
**பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே**
**இருந்திந் திரனே யெவரே வரினுந்**
**திருந்துந்தஞ் சிந்தை சிவனவன் பாலே.**

Transfixed and unassailed by invading doubts
Stout of heart, they perform tapas splendid;
An though the celestial king and others mighty descend to them,
And tempteth them,
Their determined thought on Siva firm remaineth.

கடுந்தவஞ் செய்யும் பேரறிவாளர் சிந்தையைக் கலைக்க, தேவர் கோவாகிய இந்திரனோ வேறெவரோ வந்து முயன்றாலும் முடியாது. அவர்கள் நெறிபட்ட சிந்தை சிவன் பால் நீங்காது உறுதியாக நிற்கும்.

## தவத்தினர்க்கே இறைவனை அணுக முடியும்
## Only the tapasis can approach the Lord

56. **கரந்துங் கரந்திலன் கண்ணுக்குந் தோன்றான்**
**பரந்த சடையன் பசும்பொன் னிறத்தன்**
**அருந்தவர்க் கல்லால் அணுகலு மாகான்**
**விரைந்து தொழப்படும் வெண்மதி யானே.**

He hideth and yet hideth not;
He appeareth not to the naked eye;
He of the spreading matted locks;

( தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# எழு கூற்றிருக்கை

திரு. K M. வேங்கடராமையா, அவர்கள் M. A.,
திருப்பனந்தாள்.

**வீரசோழியம்**

இது 1063—1070 வரை அரசாண்ட வீரராஜேந்திர சோழன் காலத்தில் எழுதப்பெற்ற இலக்கண நூல் ஆகும். இந்நூல் அலங்காரப் படலத்தில், சித்திர கவிகளைக் கூறு மிடத்து, "ஏறிய மாலை மாற்று பிறவும் விரித்துரையே" என் றெழுதி, உரையுள் "பிறவும் என்றதனால்,

**"மாலை மாற்றே சக்கரம் சுழிகுளம்**
**ஏக பாதம் எழுகூற் றிருக்கை**
.. .. .. ..
**வந்தன பிறவும் வகுத்தினத் துரைப்பின்**
**அந்தமில் கேள்வி யாசிரி யன்னே"** என்று **அமிதசாகரர்**

**கூறி**யன கொள்க" என்று வரைந்ததோடு,

"**எழுகூற்றிருக்கையாவது**, ஏழுவரி மூன்றறை முதல் ஒன்றற்கு ஒன்று இரண்டறை மேற்பட முறையாகக் கீறி, முறையே மக்கள் புக்கும் போந்தும் மீண்டும் ஆகும் பெற்றி

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

The gold-hued;
None but they of hard tapas may near Him;
To them is He quick of adoration;
-He, the mighty one of the white moon crest.

இறைவன் கலந்தும் கடந்தும் நிற்கின்றான்; ஊனக்கண் களுக்குத் தோன்றான்; விரித்த செஞ்சடையன்; பொன் வண் ணத்தன். அவனை தவசிகளுக்கன்றி வேறெவர்க்கும் கிட்ட முடியாது. அவர்களுக்கோ எளிதில் அருளுவான்; பிறை சூடியபெம்மான்.

(தொடரும்)

யின் வழுவாமல் ஒன்று முதலாகப் பாடுவது'' என்று விளக்க மும் தந்தார். ஆனால் அவர் இதற்கு மேற்கோட் பாடல் தரவில்லை.

**அமிதசாகரர்**

இவர் 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். இவர் எழுதிய நூல் **யாப்பருங்கலம்** என்னும் யாப்பிலக்கண நூலா கும். இந்நூலில் 'சித்திரக் கவிமாலை' என்பதில் கூறப் பட்டதே மேல் வீரசோழியத்தில் கூறப்பட்ட சூத்திரம் ஆகும். அச்சூத்திர உரையுள், ''**எழுகூற்றிருக்கையாவது** ஏழறையாக்கி முறையானே குறுமக்கள் முன்னின்றும் புக் கும் போந்தும் விளையாடும் பெற்றியான் வழுவாமை ஒன்று முதலாக ஏழிறுதியாக முறையானே பாடுவது'' என்று வரையப் பெற்றுள்ளது. பின்னர் எழுகூற்றிருக்கைச்கு இரண்டு பாடல்கள் மேற்கோளாகத் தரப் பெற்றுள்ளன. அவற்றுள் முதற்பாடல்,

**''ஒரு பொருட் கிருதுணி புரைத்தனை யொருகால்''**

என்று தொடங்கி,

**''தீதறு சிவகதி சேர்கயா மெனவே''**

என்று முடிவதாம். இது 36 வரிகளைக் கொண்டதாய், அருக தேவரை வாழ்த்திய பாடலாக வுள்ளது. (இப் பாடலே திரு. மு. இராகவ ஐயங்கார் அவர்கள் தொகுத்து அச்சிட்ட ''பெருந்தொகை'' என்ற தொகை நூலில் எழுகூற்றிருக் கைக்கு உதாரணமாகக் காட்டப்பெற்றுள்ளது.)

மற்றொரு பாடல்,

**''ஓருடம் பிருவராய் ஒன்று புரிந்''**

என்று தொடங்கி,

**''பாதம் பரவுதும் சென்னியிற் பணிந்தே''**

என்று முடிவது. இது நக்கீரர் பாடிய திருவெழுகூற் றிருக்கை; பதினோராம் திருமுறையில் காணப்படுவது. பதி னோராந் திருமுறையில் காணப்படும் பாடம், யாப்பருங்கல விருத்தியிற் காணப்படும் பாடத்துடன் பலவிடங்களில் வேறு பட்டுள்ளது.

**மாறனலங்காரம்**

இது ஒரு அணியிலக்கண நூல்; காரி ரத்ன கவிராயர் என்பவரால் எழுதப்பெற்றது; 17-ம் நூற்றுண்டுக் குரியது; அணிகளுக்குரிய உதாரணப் பாடல்களும் ஆசிரியராலேயே பாடப்பெற்றனவாம். எல்லாப் பாடல்களும் திருமால் நெறிக்கேயுரியனவாம். இந்நூலில், சித்திரகவி கூறும் சூத்திரத்தில், "சொல்லணியினுள் மடக்கின் பாற்படும் சித்திர கவி" என்று கூறி,

> "ஒன்று முதலா ஒரே ழிருகச்
> சென்றவெண் ணீரேழ் நிலந்தொறும் திரிதர
> எண்ணுவ தொன்றும் எழுகூற் றிருக்கை"

என்று எழுகூற்றிருக்கையின் இலக்கணம் எழுதித், 'தேரிலே எழுதிக் காட்டுதலும் உண்டு' என்று கூறினர். அங்ஙனம் இரதத்தில் அமைக்கும் இடத்து, 'மையத்தில் இரண்டு பத்தியாக்கி, வலமே இடமே உள்ள பத்தியில், மையத்தில் ஒன்று பதினன்கும், அதன் அயல் இரண்டு பத்திகள் பன்னிரண்டு அறைகள் கொண்டனவாய், ஒழிந்தவை பத்திதோறும் இரண்டுகுறைந்து வருவது ஆகும்; நடுமையத்து இருபத்தியில் 13 அறைகள் இருக்கும் என்று எழுதினர்.

1

1 2 1

1 2 3 2 1

1 2 3 4 3 2 1

1 2 3 4 5 4 3 2 1

1 2 3 4 5 6 5 4 3 2 1

1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

மேலே (படத்தில்) குறித்தவாறு, பாடலில் உள்ள எண்களை அமைத்து, ஒன்றுமுதல் ஏழளவுகாறும் ஏறுமுகத்

தில் அமைய, அதுவே இறங்குமுகமாகப் பின் ஏழுநிலங்களும் அமைந்து 'ஒன்று இரண்டு ஒன்று' என்று முடியுமாறு எழு கூற்றிருக்கை பாடப்பெற வேண்டும். ஆனால் எழுகூற் றிருக்கைக்கு இலக்கணம் கூறி இலக்கியமும் எழுதியுள்ள மாறனலங்காரத்திலும் முதலேழுநிலங்களும் ஏறுமுகமாக அமைந்திருத்தலையே காண்கிறோம். ஆனால் பின் ஏழுநிலங் களும் இறங்கு முகமாக அமைந்துள்ள பாடல் எதுவும் கிடைத்திலது.

**ஞானசம்பந்தர் அருளியது**

'பத்தித் தனித்தெய்வம் பார்வாழத் தந்தபிரான்' ஆகிய திருஞானசம்பந்தர் அருளிய **திருவெழுகூற்றிருக்கை** முதல் திரு முறையில் உள்ளது. இஃது இருபத்தைந்து பதிகங்கள் மட்டும் கொண்டுள்ள **அகத்தியர் தேவாரத்திரட்டு** என்ற நூலிலும் சேர்க்கப் பெற்றுள்ளது.

> **"ஒருரு வரிய பாளை வடிவே**
> **மருவார் என்ற வண்டமிழ் ஐந்தும்**
> **திருவார் மேனிச் செய்திய தாகும்"**

என்பது அகத்தியர் தேவாரத்திரட்டில் கண்ட திருப்பதிகக் கருத்துரையாகும். (இதில் '**ஓருரு**' என்றது திருவெழுகூற் றிருக்கை; '**வரிய**' என்பது சம்பந்தர் பாடிய திருக்கடவூர் மயானத் திருப்பதிக முதற்குறிப்பு; '**பாளை**' என்பது அப்பர் பாடிய கோயில் திருவிருத்தம் முதற்குறிப்பு; '**வடிவு**' என் பதும் அப்பர் பாடிய திருப்பூவணத் திருத்தாண்டகமுதல்; '**மருவார்**' என்பது சுந்தரரது திருக்கடவூர் மயானப் பதிக முதற்குறிப்பு ஆகும்.)

எனவே "ஓருரு" என்று தொடங்கும் திருவெழுகூற் றிருக்கை மேலே கண்டவாறு **வண்டமிழ்** எனப்பெற்றது என்றும், சிவபெருமானது திருவுருவத்தைச் சொல்லும் தன் மையது என்றும் அறிய வருகின்றது.

**இப்பதிக வரலாறு**

ஞானசம்பந்தரது தந்தையாராகிய சிவபாத விருதயர் தமது பூசைக் காலத்து நாடோறும் சம்பந்தர் அருளிய திருப் பதிகங்களை ஓதும் நியமம் உடையராய் இருந்தார். திருப்பதி

கங்களோ நாடோறும் பெருகலாயின; ஆகலின் அவர், திருப் பதிகங்கள் எல்லாவற்றையும், பாராயணம் செய்யமுடியாதவ ராயினர். இதனை அறிந்து, சம்பந்தர், தம்தந்தையார் பொருட்டு, இத்திருவெழுகூற்றிருக்கையைப்பாடி, 'இதனை ஓதின் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பயன் சித்திக்கும்'' என்றருளினர். எனவே இத்திருவெழுகூற்றிருக்கை ஓதின் திருஞானசம்பந்தர் ஞானத்தமிழ் முழுவதும் ஓதிய பயன் வரும் என்று அறியலாம். இது திருநாவுக்கரசர் சம்பந்தரை முதன்முறை சந்தித்துப்போனதும் பாடிய மூலஇலக்கியங் களுள் ஒன்ருகும்.*

(சாமிநாத பண்டிதர் அவர்கள் அச்சிட்ட அடங்கன் முறைப்பதிப்பில், இரதபந்தத்தில், இத்திருவெழுகூற்றிருக்கை அமைத்து அச்சிடப்பெற்றுள்ளது.)

---

* திருஞானசம்பந்தர் புராணம் செ. 276-7 காண்க.

# அருள் வாக்கு

## அன்பேசிவம்

''பரிசுத்தம் எங்கே உதயமோ அங்கு பக்தி உதயம்
பக்தி எங்கே உதயமோ அங்கு அன்பு உதயம்
அன்பு எங்கே உதயமோ அங்கு சாந்தம் உதயம்
சாந்தம் எங்கே உதயமோ அங்கு சக்தி உதயம்
சக்தி எங்கே உதயமோ அங்கு ஞானம் உதயம்
ஞானம் எங்கே உதயமோ அங்கு கிருபை உதயம்
கிருபை எங்கே உதயமோ அங்கு கடவுள் உதயம்
கடவுள் உதயம் பெற்றவர் கடவுளே ஆவார்!''

---

*(குறிப்பு:— இது யாருடைய அருள்வாக்கு என்பது தெரியவில்லை)*

கண்டு எழுதியது:—

திரு. சி. குமாரஸ்வாமி அவர்கள்,
28, கவரைத்தெரு,
நத்தம் (Po), செங்கல்பட்டு.

# மணிவாசகரின் மாண்புறு உவமைகள்

வித்துவான். திரு. பி. ரா. நடராசன் அவர்கள்.

(முன் இதழ் 9-ன் தொடர்ச்சி)

**உவமை 20**

'தினையின் பாகமும் (37)

**உ. பொ. நி.**

வினை என்போல்உடை யார்பிறர்
ஆர்உடை யான்அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்-
பன்று ... ... ... ... ...

**பொழிப்புரை**

என்னைப்போல் தீவினைப்பயனுடையார் வேறுயாருளர்? என்முதல்வனான இறைவனின் அடிமைப்பட்ட நாயேனாகிய என்னைத் தினையளவு கூடப்பிரிந்திருத்தல் அப்பெருமானின் திருக்குறிப்பன்று.

**விளக்கம்.**

தினை, பனை, என்பன அளவின் சிறுமைக்கும், பெருமைக்கும் கூறப்பெறும் எடுத்துக்காட்டுகளாம். தெய்வப்புலவரும் தம் நூலில் சிறுமை பெருமைகளை விளக்கும் இரு இடங்களில் இச்சொற்களையே எடுத்தாண்டுள்ளதைக் கீழ்க் காணும் குறள்களால் அறியலாம்.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார் (104)
தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார் (433)

மணிமொழிப்பெருமானும் அளவின் சிறுமைக்கு இதே சொல்லை 'தினைத்தனையும் ஆவதில்லை' (திருச்சதம் 76); 'தினைத்துணையேனும் பொறேன்' (நீத்தல் விண்ணப்பம் (39); 'தினைத்தனை உள்ளதோர்' (திருக்கோத்தும்பி. 3.) பிறஇடங்களிலும் ஆண்டுள்ளார். இறைவன்தன்னை விட்டுநீங்காத நிலையையும், வினைகாரணமாகத் தானே பிரிந்து வாழ்வதாகவும் கூறும் நெறியினை என்னென்பது. 'இமைப்பொழுதும் என்

நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' (சிவபுராணம். 2.) எனத் தம் நூலின் தொடக்கத்திலேயே கூறினர். நினைப்பார் நெஞ்சில் இறைவன் உடன் ஏகும் நிலையினைத் திருவள்ளுவனாரின் 'மலர்மிசை' எனத்தொடங்கும் குறளின் விளக்கவுரையில் உரைசான்ற பரிமேலழகர் "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர்நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் 'ஏகினான்' என இறந்தகாலத்தாற் கூறினர். என்னை? 'வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள என்மனார் புலவர்' (தொல். சொல். 241) என்பது ஓத்தாகலின்" எனக்கூறியுள்ளதைக் காண்க.

**உவமை 21**

**'மத்திடு தயிர்'** (40)

**உ. பொ. நி.**

**மான்நி லாவிய நோக்கியர்**
**படிறிடை மத்திடு தயிராகி.**

**பொழிப்புரை.**

மான்போன்ற நோக்கினையுடைய மகளிரது வஞ்சனை வலையுள் மத்தின் இசைப்பட்ட தயிர்போலக் கலங்கி.

**விளக்கம்.**

முன் இச்சதகத்தில் வந்த 16ஆம் உவமைக்குத்தந்த விளக்கத்தையும் இதன்பால் இணைத்துக்கொள்க. தயிரினை மோராக்க மத்திட்டுக்கடைவர். மத்து, சுழலுவதால் தாழியில் தயிர் சிதறும். இந்நிலையினைத் திருவாதவூரர் 'தயிரில் பொரு மத்தறவே' (நீத்தல் 29) 'மத்துறு தண் தயிரில்' (நீத்தல் 30) எனக்குறிப்பர். தயிர்மத்தால் சிதறினும் இனிய மோராக மாறுகின்றது. சுவைச் செறிவுடையது தயிர். தயிர் தன்னளவில் நீரைச்சேர்க்காது; சேர்க்கவும் முடியாது. மோரோ! 'மோர்பெருக்கி' என்பார்கள். மோரினைப் பெருக்கும் விதத்தினைக் கூறவும் வேண்டுமோ! மத்தால் அலைக்கழைக்கப்படும் நிலையினை விரித்துரைத்தல் ஒல்லாது. நேரிற் கண்டுணர்க.

(தொடரும்)

# பாரதியின் கடவுள் கொள்கை

திரு. மு. வைத்தியநாதன் அவர்கள், B. SC.,
கிராமம் & அஞ்சல்,
(வழி) திருவெண்ணெய்நல்லூர்,
தெ. ஆ. மாவட்டம்.

(1) பாரதியார் இவ்விருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்தப் புலவர்களில் முதன்மையானவர் என்றால் அது மிகை யன்று. மக்களின் உள்ளங்களைத் தட்டி எழுப்பியவர் பாரதி யார்; தேசப்பற்றையும், மொழிப்பற்றையும் மக்களுக்கு உணர்த்தியவர் நம் மகாகவி; அப்பெரியார், "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற அப்பரடிகளின் வழித்தோன்றல். "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்று வீரமுழக்கம் இட்டவர்; பராசக்தியின் கருணைவிழியின் அருள் பெற்றவர். இவ்வாறு பலச் சிறப்புக்கள் ஒருங்கே பெற்ற நம் பாரதியார், சமயப்பொறை நிரம்பக் கொண்டவர். சமய வெறி கொண்டவர்களைக் கண்டிப்பதில், பாரதியின்வழி, தனி வழியாகும். இவ்வாறு சிறப்புற்ற பாரதியின் சமயநெறியினை ஈண்டு நோக்குவோம்.

(2) பாரதியார் தம் பாடல்களில், இயேசுவை வணங்கு கின்றார்; முகம்மது நபியைத் தொழுகின்றார்; கண்ணனைப் பாடுகின்றார்; முருகனைப் புகழ்கின்றார்; விநாயகப்பெருமா னிடம் வேண்டுகின்றார். இவ்வாறு தெய்வங்கள் யாவற் றையும் ஒருங்கே புகழும் ஆற்றல் யாவரிடத்தும் இருப்ப தில்லை. அது சமயப் பொதுநோக்கம் கொண்டவர்களாலேயே முடியும். அப்பொதுநோக்கு நம் பாரதியிடம் உள்ளது என் பதற்கும் பல சான்றுகள் காட்டலாம். விநாயகர் நான்மணி மாலையில், தெய்வம் ஒன்றுதான் என்பதைப் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். இதனை,

"விநாயகத்தேவனாய், வேலுடைக்குமரனாய்
நாராயணனாய், நதிச்சடைமுடியனாய்
பிறநாட்டிலுப்போர் பெயர்பலகூறி
அல்லா! யெஹோவா! எனத் தொழுதன்புறும்

தேவருந்தாளுய், திருமகள், பாரதி
உமையெனும் தேவியர் உகந்த வான் பொருளாய்
உலகெலாம் காக்கும் ஒருவன் ......''

என்பதாலும்,

''சக்தியென்று புகழ்ந்திடுவோம், முருகன் என்போம்,
சங்கரன்என்று உரைத்திடுவோம், கண்ணன் என்போம்''

என்பதாலும் அறியலாம்.

(3) இவ்வாறு இறைவன் ஒருவனே என்று கூறும் பாரதிக்குச், சமயவெறிபிடித்து, 'இவன் சைவன், இவன் வைணவன், இவன் மகம்மதியன், கிறித்துவன்' என்று கூறிச் சண்டையிடுபவர்களைக் கண்டால் நெஞ்சு பொறுப்பதில்லை. அவர்களை அவர் மிகவும் சாடுகின்றார். இதனை அவரே,

''ஆத்திரம்கொண்டே இவன்சைவன் – இவன்
அரிபக்தன்என்று பெருஞ்சண்டை யிடுவார்
நெஞ்சு பொறுக்குதில்லையே''

என்று கூறுகின்றார். இவ்வாறு சமயத்தை வைத்துச் சண்டையிடுபவர்களைக் கண்டு, நெஞ்சுபொறுக்காமல், அறவுரைகளை அவர்களுக்குக் கூறுகின்றார் நம் கவிஞர் பெருமான். இப்பாரில், பலர் பலவிதப் பெயர்களைக்கொண்டு வணங்கினாலும், தெய்வம் ஒன்றுதான்; இதற்காகச் சண்டையிடுதல் வேண்டாம் என்பதனைத்,

''தெய்வம் பலபல சொல்லிப் – பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்,
உய்வதனைத்திலும் ஒன்றாய் – எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்
தீயினைக் கும்பிடும் பார்ப்பார் - நித்தம்
திக்கை வணங்கிடும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே - நின்று
கும்பிடும் யேசு மதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று – இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்''

என்று தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றார்.

(4) சிலர், தாங்கள் வணங்கும் தெய்வமே சிறந்த தெய்வம்; பிறதெய்வங்கள் யாவும் தாழ்ந்தவை என்று சண்டையிடுவார்கள். இவர்களுக்கு நம் கவிஞர்பெருமான், ஒருசிறிய, ஆனால், சிறந்த உவமைமூலம் தெய்வங்களுக்குள் உயர்ந்தது தாழ்ந்தது கிடையாது என்பதை அழகுற இயம்பியுள்ளார். வெள்ளைநிறத்தில் உள்ள ஒரு பூனை, சாம்பல் நிறம், கருஞ் சாந்து நிறம், பாம்புநிறம், வெள்ளைநிறம் ஆகியநிறங்களில் குட்டிகளைப் பெற்றாலும், அக்குட்டிகளுக்குள் பேதம் என்பது இல்லையன்றோ! அதுபோல கடவுள்களுக்குள் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதமும் இல்லை என்பதை

''வெள்ளை நிறத்தொரு பூனை – எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை
பேருக் கொரு நிறமாகும்
சாம்பல் நிறம் ஒருகுட்டி - கருஞ்
சாந்து நிறம் ஒரு குட்டி
பாம்பு நிறம் ஒருகுட்டி - வெள்ளைப்
பாலின் நிறம் ஒருகுட்டி
எந்த நிறம் இருந்தாலும் - அவை
யாவும் ஒரே தரம் அன்றோ!
இந்த நிறம் சிறிதென்றும் – இஃது
ஏற்றம் என்றும் சொல்லலாமோ ?''

என்று கூறுகின்றார். பாரதியின் உவமை நயத்தை ஈண்டு வியக்காமல் இருக்க இயலுமோ ?

(5) இவ்வாறு அனைவரும் வழிபடும் தெய்வம் ஒன்று தான். அத்தெய்வம் இயற்கைத் தெய்வம். இயற்கையை வணங்குபவன், இறைவனை வணங்குபவன் ஆவான். இறைவன் இயற்கையை உறைவிடமாகக் கொண்டுள்ளான் என்பதனை,

''ஆதிமூலமே! அனைத்தையும் காக்கும்
தேவதேவா! சிவனே! கண்ணா!
வேலா! சாத்தா! விநாயகா! மாடா!
இருளா! சூரியா! இந்துவே! சக்தியே!
வாணி! காளி மாமக ளேயோ!
ஆணாய்ப் பெண்ணாய் அலியாய் உள்ளது
யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வம்''

என்பதன்மூலம் தெளிவாக்கியுள்ளார். இதனால் அன்றோ' புலவர் பெருமான் தான் பார்க்கும் இடமெல்லாம், நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனைக் காண்கின்றார். காக்கைச் சிற கினிலும், பார்க்கும் மரங்களிலும், கேட்கும் ஒலியிலும் கட வுளைக் காண்கின்றார்.

(6) இயற்கைக் காட்சியில் இறைவனைக் காணும் புலவர் அறிவையும் தெய்வமாகக் கருதுகின்றார். 'அறிவே தெய்வம்' என்பது முதுமொழியன்றோ! 'அறிவே தெய்வம்' என்பதைச் சமயவெறிபிடித்து அலையும் மக்களிடம் மிகவும் ஆத்திரத் துடன் கூறுகின்றார் நம் பாரதியார். ஆயிரம் தெய்வங்களை வணங்கும் , அறிவற்றவர்களே, அறிவே தெய்வம் என்பதை அறிந்து கொள்ளுங்கள் என்று சினம் பொங்கக் கூறுகின்றார். இதனை,

> "ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
> அலையும் அறிவிலிகாள் - பல்
> லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
> டாமெனல் கேளீரோ ?
> மாடனைக் காடனை வேடனைப் போற்றி
> மயங்கும் மதியிலிகாள் - எத
> னூடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமெ
> ன்றோதி யறியீரோ ?''

என்பதால் அறியலாம்.

(7) இவ்வாறு நம் தமிழகம் ஈன்றெடுத்தப் பெரும் புலவர், மகாகவி பாரதியார், தெய்வங்களுக்குள் ஏற்றத்தாழ்வு இல்லையென்றும், தெய்வம் ஒன்றுதான் என்றும், இயற்கை யையும் அறிவையும் வணங்குபவர்கள், தெய்வத்தை வணங்கு பவர்கள் ஆவர் என்றும் அழகுற எடுத்தியம்பும் திறம் போற் றத் தக்கது. இயற்கையும், அறிவுமே தெய்வம்; இயற்கை யும் அறிவுமே இறைவனின் உறைவிடம்; இயற்கையையும், அறிவையும் வணங்குபவர்களே மனிதர்கள்; இதுவே பாரதி யின் கடவுள் கொள்கையாகும்.

வளர்க பாரதியின் கடவுள் கொள்கை !

# உனக்கென்ன வாய்?

திரு. சி. குமாரஸ்வாமி அவர்கள்,
55, மேட்டுத்தெரு,
நத்தம் (Post) செங்கல்பட்டு.

உலகில்பிறந்த எல்லா ஜீவராசிகளுக்கும் வாய் உள்ளது. மனிதர்களாகிய நமக்கு மட்டும் தனிச்சிறப்பு! ஏன்? நம் வாய் பேசுகிறது. (மற்ற பிராணிகளும் பேசுகின்றன. ஆனால் அவை பேசுவதை கூவுகிறது, குரைக்கிறது, கனைக்கிறது, அகவுகிறது எனக் கூறுகிறோம்). இத் தனித்தன்மை வாய்ந்த வாயை வைத்துக்கொண்டு வளவளவென்று (சத்தின்றிப்) பேசுவோர் உளர். சுயபுராணம் பாடுவோர் பலர். பிறரைப் பழித்தும் இழித்தும் பேசப் பயன்படுவதும் இந்த வாயே. இதற்கெல்லாம் மூலகாரணம் மனம். மனம் நன்றாக இருந்தால் வாய் நல்லதைப் பேசும். அகத்தின் அழகு முகத்தில்'' என்பர்.

நம்மனம் நல்லதை நினைக்க, நமக்குப் பேசும் சக்தியை அளித்த ஆண்டவன் புகழைப் பாடவேண்டும். இதைத்தான் அப்பர் சுவாமிகள் "வாயே வாழ்த்து கண்டாய்", "நெஞ்சே நீ நினையாய்" என்றார். யாரை வாழ்த்த வேண்டும்? யாரை நினைக்க வேண்டும்? கடவுளை (சிவனை). "துப்பார்திருமேனித் தும்பிக்கையான்பாதம் தப்பாமல் சார்வார்தமக்கு **வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்**", என்பது ஔவைப்பாட்டியின் அருள்வாக்கு. ஸ்ரீ ஆதிசங்கரர், "முகேமேபவித்ரம் சதாதச் சரித்ரம்", (சந்ததமும் அவன்சரிதம்சந்தமொடு வாய்பாடும்- ஸ்ரீசுப்ரமண்யபுஜங்கம். 26) என்று திருச்செந்தில் கந்தனைப் பாடியுள்ளார். திருக்குறள், "**சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க சொல்லின் பயனிலாச் சொல்**" (குறள் 200) என்கிறது.

வாய் எப்படி? எங்கே? எதை? எப்போது? பேச வேண்டும் என்பதற்குச் சிலவிதிகள் உள்ளன. அவை இவை:-

1. சிந்தித்துப் பேசுக
2. சபையறிந்து பேசுக
3. சமயமறிந்து பேசுக
4. உண்மையே பேசுக
5. நன்மையே பேசுக
6. அன்பாகப் பேசுக
7. இனிமையாகப் பேசுக
8. மெதுவாகப் பேசுக
9. பேசாதிருந்தும் பழகுக!

(மேற்கண்ட 9ம், சென்னை "அமிர்தவசனி", அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தாரால் – 54 பந்தர் தெரு, சென்னை - ஸ்ரீ அருணகிரிநாதர் விழா (ஆகஸ்ட்டு 15ல் திருவருணையில்நடப்பது) "நன்றிவழங்கல்", கடிதத்தில் உள்ளன. எனது உளங்கனிந்த நன்றி அவர்கட்கும் விழாக்குழுவினர்க்கும்! )

ஆயினும் நம் மனத்தைத் தன் போக்கில் போகவே நாம் விட்டுவிட்டு வேதனைப்படுகிறோம். மனம் என்ன செய்கிறது?

"எப்படிப் பொருள் சேர்க்கலாம் (பணம்), (அருள் அல்ல!), நான், என்மனைவி, மக்கள் மட்டுமே நன்றாக இருக்க வேண்டும் என்னும் ஆசாபாசங்களை விடாது. சிவபூஜை செய்யாது. அன்புடன் திருவைந்தெழுத்தை (சிவயநம) நினைக்காது. கோபத்தை ஒழிக்காது. சைவத் திருமுறைகளாகிய தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அருள் நூல்களைப் படிக்காது.

இப்படிப்பட்ட மனத்தை (மனம்படைத்த மனிதர்களை)க்கண்டு மனம் நொந்து"**சீசீ மனமே உனக்கென்னவாய்?**" என்று கேட்கிறார் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அவர்கள். அவர் அருளிய பாடல் இதோ:—

**"ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்,**
**நேசமுடன் அஞ்செழுத்தை நினையாய் - சீசீ**
**சினமேதவிராய் திருமுறைகள் ஓதாய்**
**மனமே உனக்கென்ன வாய் ?"**

*(சிவபோகசாரம் – ஸ்ரீ குருஞானசம்பந்தர்)*

[மேற்கண்டபாடல் குமரகுருபரன் இதழ் (பக்கம் 188) மலர் 17, இதழ் 4, சித்திரை 14—4—66 ல் உள்ளது. அல்லது ஸ்ரீ சைலம் திருப்பதிகம், ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் 22-ம் ஆண்டு நினைவு மலர் (23—3—66) அட்டையில் "திருமுறை ஓதுக" என்ற தலைப்பில் காணலாம். குமரகுருபரன் ஆசிரியர் அவர்கட்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்கும் எனது உளங்கனிந்த நன்றி.]

மேற்கூறப்பட்ட - பாடலின் நோக்கம் நம்மனம் (1) ஆசையை விடவேண்டும், (2) பாசபந்தங்களையும் விட வேண்டும், (3) சிவபூசை நிச்சயம் செய்யவேண்டும், (4) திருவைந்தெழுத்தை (சிவயநம) தினமும் ஓதுதல் அவசியம், (5) சினம் ஒழியவேண்டும், (6) திருமுறைப் பாராயணம் அவசியம் செய்தல் வேண்டும் என்பதாம்.

நம் மனம் பண்பட, நாம் மக்களாகவே வாழ நம் பெரியோர்கள் கூறியுள்ள அருள்வாக்குகளைப் படித்து, அதன்படி நடந்து திருவருள் துணையை நாட வேண்டும். அப்படிச் செய்ய இயலாதவர்கள் ஸ்ரீகுருஞானசம்பந்தர் அருளிய பாடலைத்தினமும் ஓதிவந்தால் மனம் பண்படும். நம்வீட்டுக் குழந்தைகளுக்கும் மேலே கூறப்பட்ட ஒன்பது விதிகளையும், மேற்படி பாடலையும் போதித்தால் அவர்கள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் திகழ்வார்கள்! இதையும் செய்ய முடியாதவர்கள், சீசீ உனக்கென்னவாய்? என்று பேசாமலிருப்பது நலம்! அல்லவா?

"சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

*(பராபரக்கண்ணி – 169 – தாயுமானவர்.)*

*[பக்கம் 175. ஸ்ரீ காசிமடம் வெளியீடு 1963 ஜூன்]*

"கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய், மனனே! ஒழிவாய் ஒழிவாய்,
மெய்வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய்வழி செல்லும் அவாவினையே."

*(கந்தர் அநுபூதி)*

முருகா சரணம்!

# சேக்கிழார் விளக்கும் செம்பொருள்

திரு. ந.ரா. முருகவேள் அவர்கள், M. A , M. O. L.
ஆசிரியர், திருக்கோயில்.

**முன்னுரை :**

தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானுக்குப் பலதிறச் சிறப்புகள் உண்டு. சேக்கிழார் பெருமானின் வாயிலாகவே; நாம் நமது சைவ பரிபாடைச் சொற்களையும், சிறந்த சம்பிர தாய ஒழுக்கங்களையும் தெரிந்து கொள்ளப்பெறுகின்றோம்.

'பார்கொண்ட தொண்டர் வரலாறு சொல் புராணம் அம்பலவர் அருளால் அமைந்தபடி தெரித்திட, உலகெலாம் எனும் சுருதி நாப்பண்ணும் ஈற்றும் பொருத்திப் பேர் கொண்ட சைவபரிபாடை, அறிவரிய சம்பிரதாயம் முதல் யாவும் பிறங்கத் தெரித்து எம்மை ஆண்ட குன்றைப்பிரான்' என வரும் சேக்கிழார் பிள்ளைத் தமிழ்ச் செய்யுள் இவ்வுண் மையைச் செவ்விதின் வலியுறுத்தும்.

**சேக்கிழார் சிறப்பு :**

இதுபற்றியே சேக்கிழார் பெருமானை நூலாசிரியர், உரை யாசிரியர், போதகாசிரியர், ஞானசிரியர் எனப் பலவகை களில் அறிஞர்கள் புகழ்ந்து போற்றுகின்றனர்.

'நாடிய விரிநூல் சொற்றிடு திறனால் நல் நூலாசிரியன்; நகு பாசுரம்முதல் உரை செய்தலினால் நவில் உரையாசிரியன்; நீடிய பரசமயக் குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனை செய் நிலை யாற்போதகாசிரியன்; இவை புகழ்தொறும் ஆடிய ஞானத் திறன் உறலால் ஞானசிரியனும் நீ என்று; ஆன்றோர் பலரும் புகழப் படுவ! அகிலம் எலாம் சென்று கூடிய புகழ்சால் குன்றைப் பிரான் கொட்டுக சப்பாணி! கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி!' என்று பாராட்டிப் பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் மிக மகிழ் வுறுகின்றார்.

சேக்கிழார் பெருமான், திருமுறைகளை நன்கினிது பயின்று உணர்ந்தவர்களுள் தலைசிறந்த பெரும்புலவர்! திரு

முறைகளின் சீரிய செம்பொருள்களை விளக்கும் செயலினும், சேக்கிழார் சுவாமிகள் பெறலருந்திறன் பெற்றுயர்ந் தொளிர்ந்தவர்.

'அநபாயன் அவையகம் வியக்கும் முப்புலவர் அருள் முக்கனி அருந் தமிழ்ச் சுவையனைத்தும் ஆராய்ந்து எடுத்துப் பல் செய்யுள் முகமா அறிய அறிவித்த பெருநாவலன்' எனவும்,

"தமிழ் மறை யடங்குபல மந்தணமும் தவிரும் வெற்பென விளங்க, வெப்பரிய முழுமதிக் குடை நிழற்று அநபாயன்மேய அவையகம் நயந்து வியந்து மெய்ப் பாட்டினொடு பாராட்டி மகிழ, மேல் மேல் விரித்தருளிய பிரான்! செப்பரிய குன்றையம்பதி அருள் மொழித் தேவன்" எனவும் வரும் பொருண் மொழிகளால், இவ்வுண்மையினை யாவரும் இனிதுணரலாம்.

சேக்கிழார் பெருமான் தெய்வம் மணக்கும் தமது பெரிய புராணத்தின்கண், பல பல தேவாரத் திருப்பாடல்களுக்குத் திருவருள் உணர்வு கொண்டு, தமது சீரிய கூரிய நுண்மாண் நுழை புலம் தோன்ற, அரிய பெரிய பொருள் விளக்கங்களைச் செய்தருளுகின்றார்.

தமது வாழ்நாள் முழுவதும் பெரிய புராணத்தினைப் பயின்றும் பயிலுவித்தும் மகிழ்ந்த பெருமை சான்ற பெருங் கவிஞர் ஆகிய மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள், அவற்றின் அருமை பெருமைகளை யெல்லாம் உணர்ந்தே 'நகுபாசுரம் முதல் உரை செய்தலினால் நவில் உரையாசிரியன்' எனத் திறன் தெரிந்து பாராட்டிச் சிறந்தெடுத்துப் புகழ்ந்து பாடினார். பாம்பின் கால் பாம்பன்றோ அறியும்?

**மண்ணில் நல்ல வண்ணம் :**

இங்ஙனம் சேக்கிழார் பெருமான் செம்பொருள் காட்டி விளக்கம் செய்தருளிய தேவாரத் திருப்பாடல்கள் பலவற்றுள் ஒன்றினை மட்டும் ஈண்டுக் குறிப்பிடுதல் சாலும்

**"மண்ணில் நல்ல வண்ணம்**
**வாழலாம் ; வைகலும்**

**எண்ணில் நல்ல கதிக்கு**
**யாதும் ஓர் குறைவிலை ;**
**மண்ணில் நல்லஃதுறும்**
**கழுமல வளநகர்ப்**
**பெண்ணில் நல்லாளொடும்**
**பெருந்தகை இருந்ததே ''**

என்னும் தேவாரப் பாடல், சைவ மெய்யுணர்வு சிறிதேனும் உடையவர் யாவராயினும், அவர்கள் அ[illegible]வரும் அறிந்த தொன்று. திருமண அழைப்பிதழ்களிலும், திருமண நிகழ்ச்சி களில் வாழ்த்துரை கூறும் காலங்களிலும், இத் தேவாரப் பாடலை இந்நாளில் எல்லோரும் மிகுதியாகப் பயன்படுத்தி வருதல் பெரிதும் மகிழ்தற்கு உரியது.

இப்பாடல் நம் அனைவராலும் நன்கினிது உணரப் பெற்ற தொன்றே யாயினும் இப்பாடல் சம்பந்தரால் எங்கே பாடப் பெற்றது என வினவினல், நம்மிற் பெரும்பாலோர் 'கழு மலம்' என அப்பாடலில் வருவது கொண்டு, அது சீர்காழி யிற் பாடப் பெற்றது எனவே விடைகூறுவோம். இந்தப் பாடல் திருஞான சம்பந்தப் பெருந்தகையால் எப்போது? எங்கு? எந்தச் சூழ்நிலையில்? பாடப் பெற்றது என்பதனை, நாம் சிந்தித்துணர்ந்து கொள்ளப் பெருமையால், இங்ஙனம் நாம் தவருன விடையையே கூற முற்படுதல் இயல்பாகும்.

சேக்கிழார் சுவாமிகள் திருஞான சம்பந்தப் பெருந்தகை யின் உணர்விஞேடு, தம்முணர்வும் ஒன்றி இயைந்து நின்று உணர்ந்த அனுபவத்தினைத் தெய்வத் திருவருளால் பெற்று, இத் திருப்பாடல்,சம்பந்தர் மதுரையில் இருந்த போது பாடப் பெற்றதென்றும்; அதற்குரிய சூழ்நிலை இது வென்றும்; நம் மனோர் உய்யத் தெருட்டி யருளுகின்றுர். அத் திறம் அவர்க்கே யன்றிப் பிறர்கட்கும் அமைதல் இயலுங்கொல்?

**ஏகாரத்தின் பொருள்கள் :**

"மண்ணில் நல்ல வண்ணம்" என்னும் தேவாரப் பாடல் மதுரையிற் பாடப் பெற்றது என்பதனைச் சேக்கிழார் பெரு மான் எங்ஙனம் அறிந்தனர்? "பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" எனவரும் அடியில் ஈற்றிலுள்ள

ஏகாரமே, திருவருள் துணையினால் சேக்கிழார்க்கு அக்குறிப்பைப் (Clue) புலப்படுத்தியது.

**'தேற்றம் வினவே பிரிநிலை எண்ணே**
**ஈற்றசை எனவைந்து ஏகாரம்மே'**

என்பது தொல்காப்பியம். இதனோடு 'இசைநிறை' என்ற ஒன்றையும் சேர்த்து, ஏகாரப் பொருள்கள் ஆறு என்று, நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் கூறுவர்.

'அவர்களுள் இவனே நல்லவன்' என்பது **பிரிநிலை.** 'நீயே இங்ஙனம் கூறினாய்?' என்பது **வினா.** 'இவனே அதனை எடுத்தான்' என்பது **தேற்றம்.** 'என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே' என்பது **ஈற்றசை.** 'நிலனே நீரே தீயே வளியே விசும்பே' என்பது **எண்.** 'ஏயே இவள் ஒருத்தி பேடியோ' என்பது **இசைநிறை.** ஏகார இடைச் சொல் குறிக்கும் இந்த ஆறுவகைப் பொருள்களுள் 'பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே' என்னும் வரியின் இறுதில் உள்ள ஏகாரம், ஈற்றசை (பொருளில்லாதது) எனவே, நாமெல்லாம் பெரும்பாலும் கொள்வோம். ஆனால், சேக்கிழார் சுவாமிகளோ திருவருளின் துணையால், அது வேறு பொருள் குறிப்பது என உணர்ந்து கொண்டு, நமக்கும் விளக்கிக் காட்டியருளுகின்றார்.

**சிவ பாத இருதயர் :**

திருஞான சம்பந்தப் பெருமான் பாண்டி நாட்டில் சிவ நெறியைச் செழிப்பித்துத் திருநீற்றொளி பரப்பி, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மகிழ்ந்து வணங்க, மதுரையின் கண் அரசாங்க விருந்தினராகச் சில நாள் தங்கியிருந்தார்.

அப்போது தம் அருமைத் தவப் புதல்வரின் பிரிவைத் தாங்கலாற்றாத சிவபாத இருதயர், அவரைக் காணுதற்குக் கழி பெரு வேட்கை மீதூர்ந்து, பாண்டி நாடு நோக்கிப் புறப்பட்டு மதுரையைச் சென்று அடைந்தார். மதுரையில் திருஞான சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தை வினவித் தெரிந்து கொண்டு தேடியடைந்தார். அங்கிருந்த அன்பர்கள் அவரை வணங்கி வரவேற்று, அவர்தம் வரவினைத் திருஞான சம்பந்தர் பால் ஓடிச்சென்று மகிழ்ச்சியுடன் அறிவித்தனர்.

பெருமான் அதுகேட்டு 'எப்பொழுது வந்தருளிற்று' என வினவி எதிர் எழுந்தருளினர். சிவபாத இருதயர் முன் தொழுது சென்றணைந்தார். பெருமான் அவரை எதிர் தொழுது மகிழ்ந்தார்.

உலகியல் தந்தையைக் கண்ட திருஞான சம்பந்தருக்குத் தம்முடைய அருளியல் தந்தையின் நினைவு எழுந்தது. தம் 'தாயும் தந்தையும் நலமா?' என்று உசாவியறியும் வேட்கை, அவர்பால் மிக் கெழுந்தது. ஏனைய உயிர்கட் கெல்லாம் பொதுவாக அம்மையப்பனுய் விளங்கும் இறைவன், திருஞான சம்பந்தர் திறத்தில் உண்மையிலேயே அம்மை அப்பனுய் எழுந்தருளி, இளங்குழவிப் பருவத்திற்றனே அவரை ஆண்டு கொண்டு தண்ணளி புரிந்தனன் அல்லனே? அத்தகைய அம் மையப்பரின் நலத்தை வினவியறிய அவருள்ளம் விரைந்தது. அம்மன எழுச்சியால், பெருமான் சிவபாத இருதயரை நோக்கி,

**"அருந்தவத்தீர்! எனையறியாப்**
**பருவத்தே எடுத்தாண்ட**
**பெருந்தகை; எம்பெருமாட்டி**
**யுடன் இருந்ததே?"**

எனத் திருப்பதிகம் போற்றிசைத்தார். அத்திருப்பதிகமே "மண்ணில் நல்ல வண்ணம்" எனத் தொடங்குவதாகும். அத்திருப்பதிகம் இத்தகைய ஒரு பொருந்திய சூழ்நிலையி லேயே திருந்த அருளிச் செய்யப்பட்டது என்பதனைச் சேக் கிழார் பெருமான், "காலம் இடை யிட்டவற்றையும், தேயம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண் (Intuition) கொண்டு திருவருள்துணையால் உணர்ந்து நமக்கும் உணர்த்தி யருள்கின்றார்.

**வினுப் பொருள் :**

திருஞான சம்பந்தரின் உணர்வோடு, சேக்கிழார் பெரு மானின் உணர்வும் ஒன்றி இயைந்து நின்று திளைத்திருந்தா லன்றி, இச்சூழ்நிலையை அவர் இனிதுணர்ந்திருத்தல் இய லுமோ? சேக்கிழாருக்கு இச்சூழ் நிலையின் பெற்றியுணர்தற் குப் பெரிதும் உதவியது, "பெருந்தகை இருந்ததே" என

வரும் ஈற்றடியில் உள்ள ஏகாரமே யாகும். நம் போன்ருேர் அவ்வேகாரத்தினை "ஈற்றசை" என்றோ, "பிற" என்றோ எளிதாக எண்ணி, எள்ளித் தள்ளிவிடுவோம். ஆனல், சேக்கிழார் பெருமான் தேவாரத் திருப்பாடல்களில் ஒரு சிறு எழுத்தினையும் பொருளற்றதெனப் புறக்கணிக்க உள்ளம் ஒருப்படுவரோ? சேக்கிழார் அவ்வேகாரத்தினை வினப் பொருள் குறித்ததென நுண்ணிதின் எண்ணி யுணர்ந்தார்.

"மண்ணில் நல்ல என்றெடுத்து
மனத்தெழுந்த பெருமகிழ்ச்சி
உண்ணிறைந்த காதலினால்
கண்ணருவி பாய்ந்தொழுக
அண்ணலார் தமைவினவித்
திருப்பதிகம் அருள் செய்தார்
தண்ணறும்பூஞ் செங்கமலத்
தார்அணிந்த தமிழ்விரகர்"

எனத்தாம் நுண்ணிதின் எண்ணியுணர்ந்த செம்பொருளைச் சேக்கிழார் சுவாமிகள், நாமும் உணர்ந்து மகிழ விளக்கி யிருத்தல் காணலாம்,

இச்செய்யுளின்கண் "அண்ணலார் தமை வினவித் திருப் பதிகம் அருள் செய்தார்" எனவரும் வரியில் அமைந்துள்ள **வினவி** என்னும் ஒரு சொல்லே மிகவும் உயிர்ப்புடையதாய், அத்திருப்பதிகத்தின் கருத்து முழுவதனையும் சுருக்கித் தொகுத்துத் திரட்டி யுணர்த்தி நிற்கின்றது. இங்ஙனம் இங்கு ஏகாரம் வினப்பொருள் உணர்த்தி வந்தது என்பதனைக் குறிப்பதற்கு, **வினவி** என்னும் ஒரு சொல்லைப் பெய்து பொருளைத் தெளிவு படுத்தி அருளிய சேக்கிழாரின் அருமைப்பாடு அனைவரும் வியக்கத் தகுவது. அன்றியும்,

"போதையார் பொற்கிண்ணத்து அடிசில்
பொல்லாது எனத்
தாதையார் முனிவுஉறத் தான் எனை
ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல
வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை
இருந்ததே?"

எனவரும் அத் திருப்பதிகப் பாடலின் கருத்தைத் தழுவி, அதன் குறிப்புப் பொழிப்புரை போல,

“ அருந்தவத்தீர்! எனை அறியாப்
பருவத்தே எடுத்தாண்ட
பெருந்தகை, எம்பெருமாட்டி
உடன் இருந்ததே”

என விரித்துரைத்து அருளிச் செய்திருக்கும் அழகு, நம்மனோர்க்கு ஆராப் பெருவிருந்தாக அமைகின்றது.

**முடிவுரை :**

சேக்கிழார் பெருமான் விளக்கியருளும் இன்னோரனைய செம்பொருள்கள் பலவற்றையும் தெளிந்துணர்ந்து உய்ய, நாம் அனைவரும் இறைவன் திருவருளை வழுத்துவோமாக!

*[அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் மூன்றும் ஆண்டுவிழாவில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பெரு மண்டபத்தில், திரு.* **மு. வைரமுத்து J. P.** *அவர்கள் தலைமையில், 1—6—68 அன்று ஆற்றிய சொற்பொழிவில் ஒரு பகுதியின் சுருக்கம்.]* —*ஆசிரியர்.*

---

*மேற்கண்ட கட்டுரை ‘திருக்கோயில்’ ஆசிரியரின் அனுமதி பெற்று பிரசுரிக்கப்படுகிறது.*


## “ஞானசம்பந்தம்”

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 3-00 * வெளிநாடு ரூ. 4-00

செயலாளர், “ஞானசம்பந்தம்” அச்சகம்,
தருமபுரம். மாயூரம் P. O.

# HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

---

(மலர் 19. இதழ் 9-ன் தொடர்ச்சி)

## IV

## MANIKKA VASAHAR

(Sanskrit form MANIKYA VACHAKA)

96 மறுத்தனன்யானுன்னருளறியாமையிலென்ம
    ணியே
வெறுத்தெனைநீவிட்டிடுதிகண்டாய்வினையின்றொ
    குதி
யொறுத்தெனையாண்டுகொளுத்தரகோசமங்கைக்
    கரசே
பொறுப்பரன்றேபெரியோர்சிறுநாய்கடம்பொய்
    யினையே.

96 In ignorance I spurned thy grace. Dost Thou, my gem, now me despise,
And wilt thou leave me? O destroy my sum of deeds and make me thine.
Uttarakosamangai's king, 'tis surely true, the great and wise,
When only little curs play false, to mercy ever will incline.

(To be continued.)

---

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N. B. Copies available for sale at the above Press.)

# தித்திக்கும் தெய்வநாமம்

**திரு ஸ்ரீராமநாமப்பரதேசி அவர்கள்,**
**3119, கீழ இரண்டாம் வீதி,**
**புதுக்கோட்டை-1.**

---

"**எ**ங்களுக்கு முன்னலே எழுந்துவந்து எமை எழுப்பும் தோழி'' என்று ஒரு பெண்ணை மற்ருெருத்தி எழுப்புகிருள். காலையில் எழுந்து பல் விளக்கி, குளித்து மடியுடுத்தி, நெற்றியில் வெண்ணீறு துலங்க, உன் அழகியமுத்துப் பற்கள் தெரியச் சிரித்து எம்மை எழுப்பிவிடுவாயே "முத்தன்ன **வெண்ணகையாய்**'' என விளிக்கிருள். காலை எழுந்து நல்ல விஷயங்களைச் சிந்தித்துத் தாயையும் தந்தையையும் வணங்கி எழவேண்டுமென்பது முந்தையோர் கண்ட முறை. அந்நிலையில் அதிகாலையில் எழுந்து பல் விளக்கிப் புன் சிரிப்புக் கொண்டு தன்னை எழுப்பவரும் பெண்ணே என்கிருள். ஒழுக்கம் முகத்தில் ஒளி உண்டாக்க, முத்துப்போன்ற பற்கள் அவளது புன்னகையில் ஒளிவிடுகின்றன. அவளது வெண்மையான பற்களின் ஒளியும், அவள் அணிந்துள்ள திருநீற்றின் ஒளியும் போட்டியிடுகின்றன என்பது குறிப்பு. நீ எங்களுக்குமுன் எழுந்துவந்து இறைவனை "அத்தன், ஆனந்தன், அமுதன்'' என்றெல்லாம் பேசுவாயே.

அத்தன் என்பது தந்தை. நாம் உண்டாகக் காரணமாக இருந்து நாம் வளர்வதற்கு உதவிபுரிபவன். இறைவனும் நமது ஆன்ம வளர்ச்சிக்கான காரியங்களைச் செய்தவனன்றே! ஆனந்தன் அழகிய வடிவமுடையவன் கணவனைப் போன்றவன். உலகில் பிறந்தவர் யாவரும் பெண்ணுகவும் இறைவன் ஒருவனையே ஆணுகக் கொள்ளுவதும் மரபு. எனவே கணவனுகவும் கூறுகிருள் எனலாம். அமுதன் — அழியாதவன் நாவுக்கு இனிமை தரும் அமுதம்போல் உயிர்

களுக்கு இன்பந்தந்து பேரின்ப மளிக்கும் பெருமான் எனக் கூறினள்.

பெண் திருமணத்திற்கு முன் தந்தையாலும், பின் கணவனாலும், வயதான நிலையில் இறைவனையும் துணையாகக் கொள்ளுகிறாள். உலகவாழ்வில் பெண்,

மங்கையை வாழு நாளில் வளமொடு பிதாவே காப்பான்
பொங்கிய யௌவனத்தில் பொருந்து பத்தாவே காப்பான்
தங்கிய மூப்பிற்றங்கள் தனையரே காக்கு மன்றிச்
சங்கையாமொரு காலத்தும் சுதந்திரமில்லை தானே - (நீதிசாரம்)

என்றவாறு அபலையான பெண், தன்னைக்காத்துக் கொள்ள முடியாதவள், அவளைப் பிறரே காப்பார் என்றபடி, இப்பெண் தனக்கு அத்தனைகவும், ஆனந்தன், அமுதன் என்பதெல்லாம் இறைவனே என்று கூறுகிறாள். இவ்வாறு அள்ளூறிப் பேசக் கூடியவளே! என்று அழைக்கின்றாள்.

இறைவனது நாமத்தை வாயூறப் பேசக்கூடியவர்களுக்கு எதுவேண்டுமானாலும் அளிப்பான் என்பது பெரியோர்கள் கண்ட உண்மை.

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே
அன்பொடுதன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத்துள் வைத்து உள்ள மள்ளூருத்
தொண்டருக் கெண்டிரைக் கனகம்
பற்பதக்குவையும் பைம்பொன் மாளிகையும்
பவளவாயவர் பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுது மாங்கங்கை
கொண்ட சோளேச் சுரத்தானே.

இவ்விறைவனின் நாமம் கூறின்,

"நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறும் எப்போதும் —
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன் சொரியும் —
குனிப்புடையானுக்கே சென்றுதாய் கோத்தும்பி"

என்று தாமே கூறினர். அவ்வாறெல்லாம் பேசி, எமக்கு முன் வந்து எமை எழுப்புபவளே, உன் வாயிற் கதவைத் திற" என்கின்றனர். உள்ளிருந்தவள் பதில் பேசுகிறாள்.

"பத்துடையீர்" பற்றுள்ளவர்களே எனப் பொருள் கூறுவர். பற்றுள்ளவரிடம் ஈசன் வரமாட்டானன்றே. எனவே

" பத்துடையீர் " 1) சிவசின்னம் தரித்தல் 2) குரு பக்தி 3) சிவதோத்திரம் கூறல் 4) மந்திரம் ஜபித்தல் 5) சிவ பூஜை செய்தல் 6) சிவ புண்ணியம் செய்தல் 7) புரா ணம் கேட்டல் 8) ஆலய நிர்வாகம் செய்தல் 9) அடியா ரைப் பூசித்தல் 10) அடியவர்க்கு அடிமையாதல் என்ப வைகளைக் கூறலாம். இந்த குணங்களை நெடுங்காலம் உடைய வரான. பழவடியீர் என்கிருள். "கொடிய நஞ்சு அமுதாய்க் கொண்டு, குற்றமும் குணமாய்க் கொள்ளும் இறைவன்" அப்படிப்பட்ட இறைவ னின் பாங்குள்ள நீங்கள், புதிய அடிமைகளான என்போன்ற வரின் குற்றங்களை மறந்து ஆட்கொள்ளலாகாதா? "பாங்குடை யீர், புத்தடியோம் ன்மைதீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ " என்கின்ருள்.

" வெளியுள்ளவர் " ஆஹா! புதியவள் என்று கூறித் தப்பிக்கப்பார்க்கின்ருயா? எங்களைக் காட்டிலும் நீ மேன்மை யானவளன்ருே !

விண்ணிடை மின்னெப்பானை : மெய்ப்பெரும் பொருளொப்பானை :
கண்ணிடை மணியொப்பானை : கடுவிருள் சுடரொப்பானை
எண்ணிடை எண்ணலாகா இருவரை வெருவ நீண்ட
அண்ணலை நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தவாறே.

என்றபடி சிவ நாமங்கூறி; அழகிய மனமுடையவளன்ருே நீ! எங்களை யெல்லாம் பத்துடையீர், பழவடியீர், பாங்குடையீர் என விளித்து கேலி செய்வது எங்களுக் கேற்ற தண்டனை தான் என்கின்றனர்.

சிவபெருமானையடைய நல்லவுரிணக்கமும், சிரத்தையும் வேண்டும்.

கூடிக்கூடி உன் அடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழியற்றே வற்றல் மரம் போல் நிற்பேனே?
ஊடி ஊடி உடையாயொடு கலந்து உள் உருகி பெருகி நெக்கு
ஆடி ஆடி ஆனந்தம் அதுவேயாக அருள் கலந்தே — *திருவாசகம்.*

இவ்வாறு சிரத்தையுள்ள பழ வடியாருடன் கலந்து, ஈசன் பாங்கடைய தமக்குள் ஊக்குவிக்கும் சிரத்தையும் பக்தியும் வேண்டுமென்று ஒருவரையொருவர் எழுப்புவதாக அமைந் துள்ளது இப்பாடல்.

*( தொடர்ச்சி அடுத்த பக்கம்)*

# காலக் கணிதம்

திரு. A. இராசமாணிக்கம் அவர்கள்,
உதவி ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்தொடக்கப்பள்ளி.
திருப்பனந்தாள்.

*(மலர் 19 இதழ் 9 பக்கம் 445ன் தொடர்ச்சி)*

## இதழ் 5.

**முன்குறிப்பு:**

முன் நான்காம் இதழில் மனுவாதி கல்பாதி புண்ணிய தினங்களும், கிரஹண விபரமும் கூறப்பட்டுள்ளது. இவ்விதழில் சிருஷ்டியாதி சென்ற வருஷம் கணக்கிடல், நடராச அபிஷேகம், கார்த்திகை தீபம்; மகாசிவராத்திரி முதலியவற்றையும், சகாப்த ஆண்டிற்கு மேகவிகற்பம், மாரியளவு, மழை வரும்நாள் முதலியவற்றையும் காண்போம்.

***சிருஷ்டியாதி சென்றவருஷம்:—***

பிரமாவின் முதல் பரார்த்தமாகிய 50 வயது கடந்து விட்டது. இப்போது பிரமாவின் இரண்டாம் பரார்த்தமாகிய

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

பேருக்கமும் பெரும் பக்தியும் நமக்கு ஏற்பட இறைவனை வணங்குவோமாக!

முத்து அன்ன வெள் நகையாய்! முன் வந்து எதிரெழுந்து என்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்! வந்துன் கடை திறவாய்!
' பத்துடையீர் ' ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம்! புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ!,
எத்தோ நின்அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

— *திருவெம்பாவை-3*

**சுவேத வராக கற்பம்** நடைபெறுகிறது. பிரளய காலத்தில் ஜலத்தில் மூழ்கியிருந்த பூமியை விஷ்ணு வெள்ளைப்பன்றி உருக்கொண்டு மேலே எடுத்த கற்பம் ஆதலால் இக்கற்பம் சுவேத வராக கற்பம் எனப்பெயர்பெற்றது. இத்தினத்தில் சுவாயம்புவர் மனு, சுவரோசிஷ மனு, உத்தம மனு, தாமஸ ம்னு, ரைவத மனு, சாசுஷ மனு என்னும் 6 மனுக்களும் இறந்துபோனார்கள். இப்பொழுது 7 வது மனுவாகிய வைவஸ்த மனுவின் காலம் நடக்கிறது. இந்த வைவஸ்த மனுவில் 27 மகாயுகங்கள் சென்று 28 வது மகாயுகத்தில் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் முதலிய மூன்று யுகங்களும் கடந்து கலியுகத்தில் 5069 கீலக வருஷம் நடக்கிறது. இதில் 6 மனு சந்திகள் 10368000 வருஷத்தையும் கற்பசந்தி ஒன்றுக்கு 172800 வருஷத்தையும் சேர்த்து வந்ததில் பிரமாவின் பிரபஞ்ச சிருஷ்டியின் மத்தியில் சென்ற வருஷம் 17064000 ஐக் கழிக்க சிருஷ்டியாதி சென்ற மானிட வருஷம் வரும். அதாவது ஒருமகாயுகத்தின் ஷ 4320000 ஐ 6 மனுவிற்குரிய 426 மகாயுகங்கள், 7 வது மனுவில் 27 மகாயுகங்கள் மொத்தம் 453 மகாயுகங்களால் பெருக்க 1956960000 வருஷங்கள் வருகிறது கற்பசந்தியும் மனு சந்திகளுமாகிய வருஷங்கள் 12096000. 1956960000 + 12096000 = 1969056000. இதில் 17064000 ஐக் கழிக்க ஷ 1951992000வருகிறது. இத்துடன் கிருதயுகம்ஷ1728000 திரேதாயுகம் ஷ 1296000, துவாபரயுகம் ஷ 864000, கலியுகத்தில் இதுவரை சென்றது ஷ 5069. ஆகிய வருஷங்களைச் சேர்க்க 1955885069 வருஷங்களாகிறது. இதுவே சிருஷ்டியாதி சென்ற வருஷங்களாகும்.

**நடராச அபிஷேகம்:—**

**சித்திரையிலோண முதற் சீரானியுத்திரமாம்**
**சத்ததனுவ வாதிரையுஞ் சார்வாகும் – பத்திவளர்**
**மாசியரி கன்னி மருவு சதுர்த்தசி மன்**
**றீசரபிடேக தினமாம்.**

மேற்கண்ட வெண்பாவின்படி சித்திரைமாதம் திருவோணம், ஆனிமாதம் உத்திரம், மார்கழிமாதம் திருவாதிரை, மாசிமாதம், ஆவணிமாதம் புரட்டாசிமாதம் பூர்வபட்ச

சதுர்த்தசிகள் ஆகியஇவ்வாறும் நடராச மூர்த்தியின் அபி ஷேகதினங்களாகும் இவை நக்ஷத்திரம் உதயத்திலும் திதி மாலையிலுமாம்.

நமக்கு ஒருவருஷம் தேவர்களுக்கு ஒருநாளாகிறபடி யால் இவ்வாற அபிஷேக நாட்களும் சிவபெருமானுக்குத் தேவர்களால் பிரதிதினம் செய்யப்படுகிற ஆறுகால பூஜை களாகும்.

**கார்த்திகை தீப தரிசனம்:—**

திருவண்ணுமலை ஸ்தலத்தில் சிவபெருமான் கிரிரூப மாகிய ஜோதியாய்ப் பிரமா விஷ்ணுக்களுக்குக் காட்சியளித் தருளினுர். இதுகிருதயுகத்தில் அக்கினிமலையாகவும், திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபரயுகத்தில் பொன்மலை யாகவும் இருந்து இக்கலியுகத்தில் கல்மலையாகத் தோன்று கிறது. சிவபெருமான் லிங்கோற்பவ மூர்த்தியாய்க் காட்சி யளித்த மாதம் மாசிமாதம். ஆயினும் திரும்பவும் இரவு 27 நாழிகைக்குள்ளாகச் சிவபெருமான் சோதியாய்க் காட்சி யளித்தார். அதாவது மானிட தினத்தின்படி கார்த்திகை மாதம் ஆகும். இப்படிச் சிவபெருமான் மலையுருவானதற்குக் காரணம் யாதெனின் ஒருகற்பத்தில் மகாவிஷ்ணுவும் பிரம தேவனும் தான் தான் பிரமம். என்று வாதித்துப் போரிட் டனர். இதைத்தீர்க்கும் பொருட்டுச் சிவபெருமான் அக்கினி மலையாய் அவர்கள் முன்னின்று கலகத்தைத் தீர்த்தருளினுர். அவர்கள் வேண்டுகோளின்படி அந்தஜோதி ஒருசிறிய மலை யாய்க் குறுகியது. அதைக்கண்ட பிரமதேவனும் மகாவிஷ் ணுவும் சுவாமியை நோக்கி இம்மலையின் உச்சியில் ஒரு சோதி எந்நாளும் தெரியும்படி கிருபைசெய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமான் அங்ஙனமாகுக என்றருளினுர். அந்த ஐதீகத்தின்படி கார்த்திகை தீபம் கார்த்திகைமாதப் பௌர்ணமியுடன் கூடிய கார்த்திகை நக்ஷத் திரத்தில் ஆண்டு தோறும் ஏற்றப்பட்டு வருகிறது.

**மகாசிவராத்திரி:—**

சிவபெருமான் பிரமா விஷ்ணுக்களுக்கு நடுவில் சோதி யுருவாகத் தோன்றியகாலம் மாசிமாதம், கிருஷ்ணபட்சம்,

சதுர்த்தசி, சோமவாரம் திருவோண நக்ஷத்திரம் கூடிய புண்ணியகாலமாகும் அப்பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும் காட்சியளித்த நாழிகை இராத்திரி பதினன்கு நாழிகையாகும். இது பிரமதேவனுக்கு இறுதிக்காலமாகிய பிரளய காலத்தில் சீவராசிகளெல்லாம் ஒழிந்து போனகாலமாகும். அந்த இராத்திரி நான்குசாமத்திலும் பார்வதி தேவியார் பரமசிவனைப் பூசித்துப் பின் பரமசிவத்தை நோக்கி "இந்தராத்திரி **சிவராத்திரி** எனப் பெயர்பெறவும், விரதமிருந்து இக்காலத்தில் பூசிப்பவர்கள் சாயுச்சியம் பெறவும் கிருபை செய்யவேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். அந்த ஐதீகப்படி மாசிமாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி சிவராத்திரி புண்ணியதினமாகும்.

இனி விரத விபரங்களைக் காணுமுன் பஞ்சாங்கத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள சில விஷயங்களைக் கவனிப்போம். **கலியப்தம் சாலியவாகன சகாப்தம்** என்பவற்றின் வரலாற்றினை முதல் இதழிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்து ஆங்கில ஹூ இது கலியுக சகாப்தத்தில் 3101 வருஷம் கழிக்க வந்ததாகும். இவ்வருஷத்தை மேல்நாட்டார் கலிபிறந்த 3101 ல் மார்கழி மீ 18உ வியாழக்கிழமையிலிருந்து ஜனவரி 1உ முதல் கணக்கிட்டிருக்கிறார்கள்.

**பசலிஆண்டு** என்பது அக்பர் சக்கரவர்த்தி காலத்திலே தீர்வைப்பணம் பிரித்துக் கணக்குப்பார்ப்பதற்காக வடஇந்தியாவில் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாண்டு தென்னிந்தியாவில் அவருடைய மகன் ஷாஜஹானுல் இரண்டு ஆண்டு கழித்து ஏற்படுத்தப்பட்டது. இதனுல் வடநாட்டிற்கும் தென்னுட்டிற்கும் இரண்டு ஆண்டு வித்தியாசமாம். பழையகாலத்தில் இது ஜுலை மாதம் 14உ முதல் அதாவது ஆடிமாதம் 1உ தொடங்கியது. பின்னர், சௌகரியத்திற்காக ஆங்கில அரசாங்கத்தாரால் ஜுலை மாதம் 1உ முதல் கணக்கிடப்பட்டது.

**கொல்லம் ஆண்டு** என்பது கொல்லம் என்ற ஊர் ஏற்பட்ட நாள்முதல் எண்ணப்படுவதாகும். கொல்லம் தோன்றியகாலம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமானேடு கைலைக்கு எழுந்தருளியகாலம். அடுத்து **ஹிஜிரி ஆண்டு** என்பது மக

மதிய ஆண்டு. இது மகமது நபி மெக்காவிலிருந்து மெடினு விற்குப் போனகாலந்தொட்டு எண்ணப்படுவதாகும்.

**மேகம் அறிய:—**

அந்தந்த வருஷத்தின் சாலிய வாகனசகத்தை 8ஆல் பெருக்கி 9ஆல் வகுத்த ஈவு 1க்கு வர்த்த மேகம் புன்மழை பெய்யும். 2க்கு கங்குலர்ந்த மேகம் காற்றடிக்கும். 3க்கு புஷ்களமேசம் பிரளயமாய் வருஷிக்கும். 4க்குத் துரோண மேகம் வெகுவெள்ளமாய் வருஷிக்கும். 5க்குக் காளமேகம் தூற்றலும் துளியுமாய்க் காற்றடிக்கும். 6க்கு நீலமேகம் கண்டவருஷம் பெய்த இடத்தில் பெய்யும். 7க்கு வருண மேகம் வெகுவருஷம் வருஷிக்கும். 8க்கு வாயுமேகம் பஞ்ச மாகலாம். 9ம் சரியானுல் தமோமேகம் வெகுமார்பெய்து சுபிட்சிக்கும். உதாரணம்;-

இந்த சாலியவாகன சகாப்தம் 1890 கீலக வூத்துக்கு மேகமறிய $1890 \times 8 = 15120 \div 9 = 1680$ ஈவு போக மீத மில்லே. ஆகையால் இவ்வாண்டு தமோமேகம் என்றறிய வேண்டியது.

மேக உற்பத்தியாகும் இடம் அவ்வாண்டுக்கு மேகாதி பதியாய் வருங்கிரகதிசையில் உற்பத்தியாகும். அதாவது சூரியனுக்குக் கிழக்கு, சந்திரனுக்குத் தென்மேற்கு, செவ் வாய்க்குத்தெற்கு, புதனுக்கு வடக்கு, குருவுக்கு வடகிழக்கு, சுக்கிரனுக்குத் தென்கிழக்கு, சனிக்கு மேற்கு திசைகளாகும்.

**மழையளவு:**

மழையளவை அவ்வாண்டு வருஷாதிபனுகிய இராசா எந்தக்கிரகமோ அதைப் பொறுத்துக் கணக்கிடப்படுகிறது. இரவி, சனி, இவர்கள் இராசாவாகவரில் அவ்வாண்டுக்கு மழை குறுணி. செவ்வாய் இராசாவானுல் பதக்கு. புதன் சந்திரன் இராசாவானுல் முக்குறுணி. வியாழன் சுக்கிரன் இராசாவானுல் 4 மரக்கால் மழை பெய்யும் என்பர். இந்தக் கீலக வருஷத்துக்குச் சுக்கிரன் இராசா. மழை நான்கு மரக் காலாகும். இது நூறு யோசனே உயரமும் 60 யோசனே

அகலமும் உள்ள மரக்காலால் அந்தந்த ஸ்தலத்துக்கும் உண்டான மழையில் $\frac{4}{20}$ பூமியிலும் $\frac{6}{20}$ மலையிலும் $\frac{10}{20}$ சமுத்திரத்திலும் பெய்யும் என்பதாம்:

**வருஷ பணி சக்கிரம்**

| ஊர்த்வம் | அந்தரம் | பூமி | விதலம் | சுதலம் | தராதலம் | ரஸாதலம் |
|---|---|---|---|---|---|---|
| சனி அதி வாயுநாடி | சூரியன் வாயு நாடி | குஜன் தகன நாடி | புதன் ஸௌமிய நாடி | சுக்கிரன் நிர்ஜல நாடி | குருஜல நாடி | சந்திரன் அமிர்த நாடி |
| கார்த்திகை | ரோகணி | மிருகஷீரிடம் | திருவாதிரை | புனர்பூசம் | பூசம் | ஆயில்யம் |
| விசாகம் | சுவாதி | சித்திரை | அஸ்தம் | உத்திரம் | பூரம் | மகம் |
| அனுஷம் | கேட்டை | மூலம் | பூராடம் | உத்திராடம் | அபிஜித் | திருவோணம் |
| பரணி | அசுவணி | ரேவதி | உத்திரட்டாதி | பூரட்டாதி | சதயம் | அவிட்டம் |
| அதிகக் காற்று | மழை காற்று | ஜலக் குறைவு | சுவல்ப மழை | கண்ட மழை | நல்லமழை | அதிகமழை |

மேற்கண்ட சக்கரத்தில் எழுதியிருக்கும் நக்ஷத்திரங்களில் சந்திரன் வரும்போது அங்காரகன், குரு சேர்ந்தாலும், ஏக நாடியாலும் மழையுண்டாகும். சுக்கிரன் இருக்கும் இராசிக்கு 4, 8ஆம் இராசியில் சனி நிற்கில் மழை. மத்தியில் பாவக் கிரகங்கள் நிற்கில் மழையில்லை. இது முக்கியமாய் மழை காலத்தில் பரீக்ஷிக்க வேண்டியது. மற்றைய காலங்களில் அந்தந்த நாடியில் சொல்லியபடி அறிகுறிகளைக் காணலாம்.

மற்றும் வாரத்தில் வருகிற யோகம், யோகினி, இராசி இருப்பு, அகஸ் முதலியவற்றின் விபரங்களைத் தொடர்ந்து எழுதப்பெறும்.

---

(தொடரும்)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

## திருப்புலம்பல்.

இனி, திருப்புலம்பல்
அகத்தியச் சூத்திரம்.

சாக்கிராதீதத் தனித்திருப் புலம்பல்
நீக்கமிலாத சிவானந்த நிலை.

பொழிப்புரையநுபவம்:—முற்பதிகத்திற் சுட்டறிவொழிந்து அதுவாய்ப்பெற்ற பேரின்பப் பொருளாகி மற்றொன் றறியேன் என்னுமாநந்தம் பெற்றதற்கு உருக்கம் பெற்றிலேனென்ற சிவானந்தாநுபூதிகம். **கலிவிருத்தமாக, செல்வத் திருவாரூரிலோதியது.**

554. இனி, மற்றுப்பற்றன்றித் திருவடியே பற்றான தென்ற (தி. - ன.):—

**பூங்கமலத் தயனெடுமால் அறியாத நெறியானே**
**கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறுவெண் ணீறுடி**
**ஓங்கெயில்சூழ் திருவாரு ருடையானே அடியேனுன்**
**பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே.**

(இ - ள்). ஆண்டவனே! ஓர் விண்ணப்பம்; தேவரீர் பொற்பாத சேர்வை திருமாலயனுங் காணொண்ணாது; கோங்கமலர் குவிதற் போல வற்றாது முற்றாது ஞானத் தனமுடைய அம்மை பாகனே! நீறணி கடவுளே! உயர்ந்த மதில் சூழுஞ் செல்வத் திருவாரூரொளிவளர் புற்றிடங் கொண்ட வீதி விடங்கா! நினது ஆடரவக் கிண்கிணி பாதமே கதியெனப் புகழ்வேன்; அல்லது வேறு யாதொருருவையுங் காணேன்; துதியேன்; என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

# உண்மையை உணர்ந்த வன்மையினர்!

திரு. அரங்க. முத்துமணி அவர்கள்,
துணைப்பதிவாளர்,
செந்துறை (Po), திருச்சிமாவட்டம்.

---

"யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்" உலகினர், வாழ்நாளில் கண்டதேகாட்சி, கொண்டதேகோலம் என்று அலையும் சின்னாட்களில், யான்என்னும் மமதையும், எனதுஎன்னும் அகங்காரமும் கொண்டு அலைகின்றனர். இவை அத்தனையும் உயிர் உடலில் உள்ளவரைதான்; முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பலாகி விட்டால்...? ஆடிய ஆட்டம், பாடியபாட்டு எல்லாவற்றுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது; அம்பலத்தாடும் கூத்தப்பெருமானின் ஆட்டம் முடிவில்லாதது. அவன் ஆட்டத்தில் உலகம் ஆடுகிறது; சுற்றுகிறது; அவன்மனிதனின் உள்ளத்திலிருந்து ஆட்டுவிக்கின்றான். ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே! அவன் ஆட்டம் நின்றுவிட்டால், மனிதனுடைய ஆட்டபாட்டங்களும் நின்றுவிடுகின்றன.

எனவேதான், மணிவாசகப் பெருந்தகை, "யானேபொய் என்நெஞ்சும்பொய், என்அன்பும்பொய்" என்றுகூறியருளியவர்கள், இறைவனை எப்படிப் பெறலாம் என்பதற்கு "அழுதால் உன்னைபெறலாமே" என்றும் வழுவறவழுத்தினார்கள். இதனைத்தோணிபுரத்தோன்றல், "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கத்" தோன்றிய: ஞானசம்பந்தப் பெருமான், இளமையிலே செய்து இறைவன் திருவருளைப் பெற்றார்கள். அதுகருவிலே அமைந்த திருவாக அமையும்

ஆன்மிக பலத்தைவிட்டு, ஆணவமலத்தைக்கொண்டு அலைந்தவர்கள் - அலைகிறவர்கள் ஏராளம். ஆணவமலத்தைக் கொண்டு அலைந்தவர்களும், தான்என்ற தருக்கிலே, மிக்கு

நின்றவர்களும், இறைவன் பெருமையை அந்தியகாலத்திலே கண்டு சிந்தை மகிழ்ந்திருக்கிறார்கள். இதனைச் செப்பமுற எடுத்துக்காட்டும் ஒப்பற்ற இலக்கியங்கள்தான் கம்பராமா யணமும், கந்தபுராணமும்:

கற்றோர்க்கிதயங் களிக்கச்செய்யும் கம்பராமாயணத்திலே ஒரு காட்சியைக் காண்போம்; வல்லமைபடைத்தவன் வாலி, நல்லோர்க் கருங்கூற்றாய் அல்லனெவே செய்தொழுகிய இரா வணனையும் வாலிலே கட்டிக்கொண்டு வரக்கூடிய அளவிற்கு வன்மை மிக்கவன். இதனை, "வாலி யென்றுளான் வரம் பிலாற்றலான்" - என்று சொல்லின்செல்வனாகிய அனுமன் கூறுமாற்றால் தெள்ளிதிற் தெரியலாம் .... ....

அப்படிப்பட்டவாலி, தக்க இன்ன, தகாதது இன்ன என்று ஒக்க உன்னலன்; தம்பியின் (சுக்ரீவனின்) மனைவியை நயந்தான்; தரணியே தனதென்றான்; வீரத்தின் பரணிபாடி னான்- அறத்தின்பால் நாட்டங் கொள்ளாதவன், ஆண்டவ னைப் பற்றிச் சிந்தியாதவன், வாழ்நாள் முழுதும் வலிமை யையே நம்பிவாழ்ந்தவன். அப்படிப்பட்ட வாலியும், அறத் தின் மூர்த்தி ஸ்ரீ இராமர், மரத்தின் மறைவிலிருந்து அம்பு விட்டு, அவனைக் கொல்லப்போகும் ஞான்று திருந்தினான். தான் செய்த தவறுகளுக்கு வருந்தினான். ஒரு கணம், மரத்தின் மறைவில், அறத்தின் வடிவம் ஸ்ரீ இராமர், தன் திருமால்வடி வத்தைக் காட்டிநிற்க, இறுதியில் இறைவனுடைய வடிவைக் காணநேர்ந்த பெற்றிக்கு, உற்றதோர் மகிழ்ச்சியில், வன்மை மிக்க வாலி உண்மையை உணர்ந்து கூறுகின்றான்.

"ஏவு கூர் வாளியா லெய்துநா யடியனேன்.
ஆவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்
மூவர் நீ முதல்வனீ முற்று நீ மற்று நீ
பாவ நீ தருமநீ பகையு நீ யுறவு நீ"

(கம்ப: கிட்: வாலிவதைப் படலம்)

அடுத்து, சிந்தையைக் கவரும் கந்த புராணத்திலே ஒரு காட்சியைக் காண்போம் :

ஆணவம், மாயை, கன்மம் இவற்றின் வடிவங்களாக விளங்கியவர்கள்தான் சூரபன்மன், சிங்கமுகன், தாரகன்

ஆகியோர். இதில் ஆணவத்தின் எல்லையென நின்று ஆர்ப் பரித்த சூரன், வீரத்தின் உறைவிடமென விளங்கினன்; உண் மைப் பொருளான இறைவனைக் கருதாது வன்மையின் வழி நின்றான்; தேவர்களைத் துன்புறுத்தினன்; தேவர் துயர்நீக்க வந்த திருக்குமரன், முருகப் பெருமான், சூரனைத் திருத்தவே எண்ணினர், குழந்தை ஒரு தவறு செய்தால், தந்தை திருத்து மாப்போல...... "கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு ஒரு திரு முருகனுக" வந்த கந்தப் பெருமானைச் சிந்தையில் பெரிதாக எவ்ணவில்லை சூரன். தன் ஆற்றலை நம்பினன். முருகனுடைய தோற்றத்தைக் கண்டு, "யாரோ ஒரு சின்னக் குழந்தை, மயில் குஞ்சின் மீது ஏறிவந்திருக்கிறது" — என்று நினைத்தான். இதனைப் புரிந்து கொண்ட முருகப் பெருமான் "நாம் சின்னஞ்சிறிய உருவத் தில் இருப்பதனல், இவன் கண்ணுக்கு நம் அழகு புலப்பட வில்லை; ஆயிரங் கோடி காமர் அழகெலாந்திரண் டொன்றன வடிவத்தைக் காட்டினலே வசப்படுவான்" என்று எண்ணி னர். "நாலாயிரங் கண்படைத் திலனே" என்று கருணைக்கு எடுத்துக் காட்டென விளங்கும் அருணகிரிப் பெருமான் கூறு மாப்போல, சண்டன வெல்லாம் மோன உருவெளி (யென)த் தன் அழகு காட்டி நின்றர். முருகப்பெருமானுடைய ரூபலா வண்யத்தை நுகர ஆரம்பித்தான் சூரன். திருவடி முதல் திருமுடிவரைக் காண எண்ணினன்; முழு உருவத்தையும் ஒரு சேரக்காண முடியவில்லை; அங்கம் அங்கமாகப் பார்த் தான். அத்தனையும் அவன் பார்வை வளையத்துக்குள் எல்லை கட்டி நிற்கவில்லை; அழகை ரசிக்கத் திண்டாடுகிறன்; விரிந்து, பரந்த முருகனுடைய அழகை - தேஜசைக் காணமுடியாமல்; திருவடியின் அழகில் ஒரு பகுதியை, ஆயிரங்கோடி மன்மதர் களுடைய அழகுக்கு ஒப்பிட்டுப் பார்க்கின்றன்; அவை களும் இவைகளுக்கு ஒப்பாகுமோ? என்று வியந்து, நயந்து பாடுகின்றன்; "மூலமூர்த்தியை இன்று கண்டு, ஞாலத்தில் உயந்தேன்; பாலனென்று நினைத்தேன்; இன்று அவன் பாத கமலத்தைக் கண்டேன்; என்பாதக மலத்தை அறுத்தேன்" என்று உண்மையை உணர்ந்து, திண்மையுடன் பாடுகிறன்.

**"கோலமா மஞ்ஞை மீதிற் குலவிய குமரன் தன்னைப்**
***பாலனென் றிருந்தேன் அந்நாள்; பரிசிவை யுணர்ந்திலேன்யான்***

மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றே?''

*(கந்: சூர: வதைப்படலம்)*

எனவே வன்மையின் வழி சென்ற வாலியும், சூரனும், யான், எனது என்னும் செருக்கின் வழிநின்று, உண்மைப் பரம் பொருளை உணரமறந்தனர். அறத்தின்பால் நீங்கிய இவ்விருவரின் செருக்கழித்து, வள்ளுவர் கூறியாங்கு, வீடுபேறு அளித்தனர், வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல் ஸ்ரீ இராமச் சந்திர மூர்த்தியும், முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் ஸ்ரீ முருகப்பெருமானும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுமாகலான், யான், எனது என்னும் செருக்கழித்து, எங்கும் நிறைந்து, யாவுமாய் மிளிர்கின்ற இறைவனுடைய திருவடிகளைப் பற்றவேண்டும். உண்மையைக் கண்டு உறுவழி நடந்தால், நன்மைகள் யாவும் நாடி வந்தடையும்!

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே.

— *திருவாசகம்.*

# அவிநாசியில் மகாசிவராத்திரிக் கட்டளைநிதி ரூ 1000

திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய காலத்துச் சிவபெருமான் அனற்பிழம்பாய் நின்றமையின் அவ்வொளி சிறந்த இரவதே சிவராத்திரி எனவும், பேரூழிக்காலம்வர யாவும் ஒடுங்க உயிர்கள் மாட்டுக் கருணைபூண்டு உமாதேவியார் நான்கு யாமங்களிலும் சிவபூசை செய்ய இரண்டாம் யாமத்தில் வெளிப்பட்ட சிவபெருமான் திருவுளப்பாங்கின் வண்ணம் உமா தேவியார் வரம்வேண்ட அவ்வரத்தின்படி அம்மையார் நோற்ற அவ் இரவே சிவராத்திரி எனப்பெற்றது என்றும் பேசப்பெறும் வரலாற்றையுடையது சிவராத்திரி.

இராசசேகரன் என்ற பாண்டிய மன்னன் பாண்டி நாட்டில் ஆட்சி செய்யுங்கால் மதுரைத் திருவாலவாய்க் கோயிலில் பெருமான் இடையறாது தாள்ஒன்றே நோவ "வெள்ளியம்பலத்துள் ஆடியருளுதலால்திருவடிக்குவருத்தம் நேரிடும் கொல்லோ" என்று அஞ்சி, "இந்தக் கூத்தை நாம் சென்று எப்படித் தடுப்பது" என்று கவன்று, சிவராத்திரி நாளில் சிவபெருமானுக்கு நான்கு யாமங்களும் விதிவழி சிறந்த பூசையியற்றிக் "கால்மாறி யாடுக" என்று வேண்டிக் கொண்டதற்கேற்ப இறைவன் கால்மாறியாடியருளினர். இங்ஙனம் சிவராத்திரி நாளில் கால்மாறி யாடியருளிய சிறப்பு வாய்ந்த மதுரையோடு தொடர்புபடுத்தி மாணிக்க வாசக சுவாமிகள் தம் திருவாசகத்தில் "அரியபொருளே அவிநாசியப்பா பாண்டிவெள்ளமே தெரியவரிய பரஞ்சோதி" என்று குறிக்கப்பெற்ற தலமாக விளங்குவதும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் "புரைக் காடு சோலைப்புக் கொளியூர் அவிநாசியே, கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்ல காலனையே" என்று திருப்பதிகம் பாடி முதலையுண்ட பாலனை அழைத்த அற்புதம் நிகழ்ந்த பதியாகியதும், கொங்கு நாட்டுத் தலங்களுள் ஒன்றாகியதும் ஆன திருப்புக்கொளியூர் அவிநாசியெனப் பெறும் சிவஸ்தலத்தில் மாசி மாசத்தில் வரும் மகா சிவராத்திரி நாளில் நான்கு யாமங்களில் ஏதாவது ஒரு யாமத்தில் அவிநாசியப்பராகிய சிவலிங்கப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை நைவேத்தியங்கள் செய்வித்தற்பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப் பெற்றது. இது "அவிநாசியில் மகா சிவராத்திரிக் கட்டளை" எனப் பெயர் பெறும்.

2. இதற்குறிய முதற்பொருள் ரூ. 1000/- ரூபா ஓராயிரம். இது ஆண்டொன்றுக்கு 7% வட்டிதரக்கூடிய நிலையான முதலீடாகக் கும்பகோணம் ஸ்டேட் பாங்கில் 60 மாதங்களுக்கு முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டிபாஸிட் இரசீது நெ 076352 - 9-2-68உ ரூ. 1000/- இது நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

3. இதுவரை திருமாகறல், திருக்கோவலூர், திருவெண்ணெய்நல்லூர், திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், திருச்சாய்க்காடு/ சாயாவனம்/, திருலோக்கி, திருவாப்பாடி, திருக்குற்றாலம் என்னும் ஒன்பது தலங்களில் நம்மால் சேமநிதி நிறுவப்பெற்று மகாசிவராத்திரிக்கட்டளை நடத்தப்பெற்று வருகிறது. அங்ஙனமே இச்சேமவைப்பினின்று கிடைக்கும் வட்டித்தொகையில் இத்தருமத்தைப் பரிபாலனம் செய்வதற்குரிய நிர்வாகச் செலவு போக எஞ்சிய தொகை முழுவதும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அவிநாசி என்னும் தலத்தில் கோயில்கொண்டருளியுள்ள அவிநாசியப்பர் ஆகிய சிவலிங்கப்பெருமானுக்கு மகாசிவராத்திரி நாளில் 4 யாமங்களில் ஒரு யாமத்தில் மட்டுமே விசேஷ அபிஷேக நைவேத்தியம் நடத்துவிக்கப் பயன்படுத்தப்பெறும்.

4. ஆண்டுதோறும் இத்தொகை அவிநாசி அவிநாசியப்பர் கோவில் மானேஜிங் டிரஸ்டி அல்லது நிர்வாக அதிகாரி அவர்களுக்கு அனுப்பப்பெறும். அவர் அத்தொகையைக் கொண்டு ஷெ தருமத்தை நடத்தி, நடத்திய விவரத்தை நமக்கும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கட்கும் தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

5. இத்தொகை வேறு எம்முறையிலும் பயன்படுத்தப் பெறமாட்டாது. இம்முதற்பொருள் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களிலோ அல்லது நிலையான முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெறும். இம்முதற்பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும்.

Tirupanandal
Dated 9-2-1968 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvadamarudhur Sub Register's Office as No. 7 of 1968 of Book 4 volume 54, pages 181 to 183 dated 13-2-1968.

## கலைக்கோயிலில் வரப்பெற்றுக் கொண்ட புத்தகங்களின் விபரம் (தொடர்ச்சி)

| தொடர் எண் | புத்தகத்தின் பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 11404 | கல்யாண் (ஹிந்தி) | |
| 11405 | திருச்செந்திலாதிபன் ஸுப்ரபாதம் | விஸ்வரூபதர்சனர்த்திகள் ஸபை |
| 11406 | திருச்சாயக்காடு கோயில் வரலாறு | G. சோமசுந்தரம் B. SC., தேவஸ்தான வெளியீடு |
| 11407, 8, 9 | ஸ்ரீ ராமேஸ்வரம் தனுஸ்கோடி தலவரலாறு | ஸ்ரீ ராமநாதசுவாமி தேவஸ்தான வெளியீடு |
| 11410 | ஸ்ரீ திருச்செந்திலாதிபன் விஸ்வரூபதரிசன மகிமை | விஸ்வரூபதர்சனர்த்திகள் ஸபா |
| 11411, 12 | மூவர்தேவாரம் - தலமுறை (அடங்கன்முறை) | (ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம்) (பன்னிருதிருமுறைப் பதிப்புநிதிவெளியீடு) |
| 11413 | திருமந்திரம் எட்டாம் தந்திரம் - முற்பகுதி | திருவாவடுதுறை ஆதீன வெளியீடு |
| 11414 | திருமந்திரக்கட்டுரை மூன்றும் தந்திரம் | ஷை ஷை |
| 11415, 16 | வித்துவான் தேர்வு வினு விடை (யாப்பெருங் கலக்காரிகை) | ஆக்கியோன்; தா. ம. வெள்ளைவாரணம், திருப்பனந்தாள் |
| 11417, 18 | ஷை ஷை (தண்டியலங்காரம்) | ஷை ஷை |
| 11419 | வடலூர் வரலாறு | ஊரன் அடிகள், சமயபுரம் |

(தொடரும்)